Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 36
கதிர் : 335
திங்கட்கிழமை
ஐப்பசி 15 ஆம் நாள்
01 நவம்பர் 2021
வள்ளுவர் ஆண்டு 2053
பக்கங்கள்: 16
விலை : ரூ.30
செய்தி : 021 493 0000
விளம்பரம்: 021 493 1111

## ராஜபக்ச அரசு தூள் தூளாகும்

எதிர்க்கட்சித் தலைவர் எதிர்பார்ப்பு

கொழும்பு, நவ.1
மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்துவிட்டோம் என்று மார் தட்டிய அரசு, இன்று தூள் தூளாகச் சிதறும் நிலையில் 15

# ஆளும் அரச கூட்டுக்குள் முற்றுகிறது முரண்பாடு

### விலகுவது தொடர்பில் பங்காளிகள் ஆராய்வு
### பதவிகளைப் பறிக்க ஆளும் தரப்பு அழுத்தம்

கொழும்பு, நவம்பர் 1
ஆளும் ராஜபக்ச அரசுக்குள் அண்மைக்காலமாக புகைந்து கொண்டிருந்த மோதல்கள், இப்போது பற்றியெரிய ஆரம்பித்துள்ளன. அரசுடன் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளால், பங்காளிக் கட்சிகள் சில அரச கூட்டணியில் இருந்து விலகுவது தொடர்பாக ஆராய ஆரம்பித்துள்ளன என்று உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன.
யுகதனவி மின் நிலையப் பங்குகளை அமெரிக்காவுக்கு வழங்கும் உடன்படிக்கையில் இலங்கை அரசு கைச்சாத்திட்டது முதல் அரசுக்கும், பங்காளிக் கட்சிகளுக்கும் இடையிலான முரண்பாடுகள் உச்சம் பெற்றுள்ளன. 15

## பொருத்தமில்லை என்றால் விவாகரத்துச் செய்யுங்கள்!

### பங்காளிக் கட்சியினருக்கு அமைச்சர் ரோஹித அறிவுரை



கொழும்பு, நவ.1
அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில போன்றோர் ஆளும் கட்சியின் கூட்டத்தில் ஒன்றைக் கூறிவிட்டு, வெளியில் சென்று இன்னுமொன்றைக் கூறுவதை ஸ்ரீலங்கா 15

## ஆலோசனை வழங்கவே ஞானசாரருக்குப் பதவி!

### சமாளித்தார் கோத்தாபய



கொழும்பு, நவ.1
பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்குப் பதவி வழங்கப்பட்டமை, தனக்கு ஆலோசனை வழங்குவதற்காகவே என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார். 15

## அதிக பயணிகளை ஏற்றினால் ஆபத்து

### எச்சரிக்கிறார் திலும் அமுனுகம

கொழும்பு, நவ.1
ஆசனங்களின் எண்ணிக்கைக்கு அதிகமான பயணிகளை ஏற்றிச்செல்லும் பஸ்களின் சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கு எதிராகக் கடும் 15

## கச்சாயில் விபத்து முதியவர் உயிரிழப்பு

கொடிகாமம், நவ.1
கச்சாய் வீதியில் நேற்று மாலை நடந்த விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். சைக்கிளில் பயணித்த முதியவரை மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.
கச்சாய் வீதியில் உள்ள சமுர்த்தி வங்கிக்கு அருகில் இடம்பெற்றுள்ள இந்த விபத்தில் கொடிகாமம், கச்சாய் வீதியைச் சேர்ந்த செல்லையா சற்குருநாதன் (வயது-78) என் 15

முச்சந்தி முரளி



"கொரோனாவோட விழுந்த அரசாங்கத்தை இப்ப கூட்டாளியளும் ஏறி மிதிக்கினம் பாருங்கோ"

## அமைச்சின் செயலருடன் தினேஷுக்கு "லடாய்"

கொழும்பு, நவ.1
தனது அமைச்சின் செயலாளருடன் இணைந்து பணியாற்ற முடியாதுள்ளது என்று கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கு 15

## கொரோனா சாவு 18

கொழும்பு, நவ.1
கொரோனாத் தொற்றால் நேற்று முன்தினம் மேலும் 18 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
உயிரிழந்தவர்களில் 10பேர் ஆண்கள் என்றும், 8 பேர் பெண்கள் என்றும் அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளன. அத்துடன் உயிரிழந்தவர்கள் அனைவரும் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த உயிரிழப்புகளுடன் நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 13 ஆயிரத்து 743 ஆக அதிகரித்துள்ளது. (எ-இ)

### வடக்கு மாகாணத்தில்
## சுகாதாரத் துறையினருக்கு இன்றுமுதல் 3ஆவது டோஸ்

யாழ்ப்பாணம், நவ.1
வடக்கு மாகாணத்தில் பணியாற்றும் சுகாதாரத் துறையினருக்கு இன்று முதல் கொரோனா பூஸ்டர் தடுப்பூசி டோஸ் ஏற்றப்படும் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.
பூஸ்டர் தடுப்பூசியாக பைசர் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது என்றும், 15

## தரம் 5 மாணவனுக்கு கொரோனா

வவுனியா, நவ.1
வவுனியாவில் தரம் 5 மாணவன் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அதையடுத்து அந்த மாணவனுடன் தொடர்புகளைப் பேணிய ஏனைய 15

### அநுராதபுரம் பாடசாலையில்
## கொரோனாக் கொத்தணி!

கொழும்பு, நவ.1
அநுராதபுரம் மாவட்டத்தில் ஆரம்பப் பாடசாலைகளில் பயிலும் 30 மாணவர்கள் மற்றும் மூன்று ஆசிரியர்கள், ஒரு அதிபர் உள்ளிட்டோருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
அநுராதபுரம் மாவட்ட தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவின் மருத்துவர் ஆர்.எம்.எஸ்.பி.ரத்நாயக்க இந்தத் தகவலை உறுதிப்படுத்தியுள்ளார்.
ஹொரவப்பொத் 15

## இரவுநேரம் வீடு புகுந்து 9 பவுண் நகை 'அபேஸ்'!

கொடிகாமம், நவ.1
வீட்டில் எவரும் இல்லாதநேரம், வீட்டுக்குள் புகுந்த திருடர்கள் 9 பவுண் தங்க நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர் என்று கொடிகாமம் 15

# ஒதியமலைக் கிராமத்துக்கு நடமாடும் மருத்துவ சேவை

## பொது அமைப்புகள் கோரிக்கை

**முல்லைத்தீவு நவ. 1**

**முல்லைத்தீவு -ஒதியமலைக் கிராமத்துக்கு நடமாடும் மருத்துவ சேவையை நடத்துவதற்கு முல்லைத்தீவு மாவட்ட பிரதி சுகாதாரப் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஒதியமலை பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.**

80 குடும்பங்கள் வாழ்கின்ற இந்தக் கிராமத்தில், மருத்துவத் தேவைக்காக 16 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள ஒட்டுசுட்டான் பிரதேச மருத்துவமனை மற்றும் ஆறு கிலோ மீற்றர் துரத்தில் உள்ள வவுனியா வடக்கின் நெடுங்கேணி பிரதேச மருத்துவமனை ஆகியவற்றுக்குத்தான் செல்ல வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

கடந்த பத்தாண்டுகளாக ஒதியமலைக் கிராமத்துக்கான பேருந்து சேவைகள் இடம் பெறுவதில்லை. போக்குவரத்து நெருக்கடியை இந்தக் கிராம மக்கள் எதிர்கொண்டுள்ளனர்.

மகப்பேறு, பாம்புக்கடி, காட்டு விலங்குகளின் தாக்குதல்கள், விபத்துகளின் போது இக்கிராம மக்கள் மருத்துவமனைகளுக்குச் செல்வதில் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். மகப்பேற்றுக்குரிய பெண்கள், சிறுவர்கள் மாதாந்த சிகிச்சைக்காகச் செல்வதற்கும் சிரமங்கள் எதிர்கொள்கின்றனர். இந்த நிலையில் நடமாடும் மருத்துவ சேவை ஒன்றை வாரத்தில் ஒரு நாள் நடத்துவதன் மூலம் ஒதியமலை மக்கள் பெரும் நன்மையடைவார்கள்.

இதற்கான நடவடிக்கையை மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் எடுக்க வேண்டும் எனவும் ஒதியமலை பொது அமைப்புகள் வலியுறுத்தி உள்ளன. (ய-13)

# 40 லீற்றர் கசிப்புடன் இருவர் கைதாகினர்

கிளிநொச்சி, நவ. 1

தருமபுரம் பொலிஸ்பிரிவுக்கு உட்பட்ட இரு பகுதிகளில் தலா 20 லீற்றர் கசிப்புடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

குமாரசாமிபுரம் பகுதியில் வீட்டில் மறைத்துவைத்து கசிப்பு விற்பனை செய்யப்படுவதாக கிடைக்கப்பெற்ற இரகசியத்தகவலை அடுத்து அந்தப் பகுதிக்கு நேற்று முன்தினம் சென்ற பொலிஸார் 20 லீற்றர் கசிப்பை மீட்டனர். அதனை விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரைக் கைதுசெய்தனர்.

அவ்வாறே, மற்றொரு பகுதியில் 20 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டது. அதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டிலும் ஒருவர் கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (து-113)

# இறுதிப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், நவ. 1

யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரியின் குறுகிய கால கற்கை நெறிகளுக்கான இறுதிப்பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

குடிசார் எந்திரவியல், பொறிமுறை பொறியியல், மின் பொறியியல், கனிய அளவையியல் ஆகிய பாட நெறிகளை இதுவரை பூர்த்தி செய்யாத மாணவர்களுக்காக மீண்டும் இந்தப் பரீட்சையை நடத்துவதற்கு அனுமதி கிடைத்துள்ளது.

இந்தப் பரீட்சைக்குத் தோற்ற விரும்புபவர்கள் யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரியின் பரீட்சைப் பிரிவுடன் தொடர்புகொண்டு தமது விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம4)



# பாடல்பாடிய சிறுமிக்கு பரிசு 10,000/=

## இராஜாங்க அமைச்சர் நெகிழ்ச்சி

மன்னார், நவ. 1

மன்னார் மடுப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட காக்கையன்குளம் மதீனாநகர்ப் பகுதியில் 75 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட குடிதண்ணீர்த் திட்டத்தை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தநிகழ்வின்போது சிறுமி ஒருவர் பாட்டுப்பாடியிருந்தார். பாடல்மொழி புரியாவிட்டாலும் சிறுமியின் குரல்வளம் பிடித்துப்போகவே இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, 10 ஆயிரம் ரூபா வழங்கி சிறுமியைப் பாராட்டினார். குறித்த சிறுமியின் இசை வளர்ச்சிக்கு தேவையான இசைக்கருவிகளை விரைவில் பெற்றுத்தருகின்றேன் என்றும் கூறினார். அதனைப் பெற்றுக்கொண்ட அந்தச் சிறுமி கண் கலங்கியவாறு நன்றி தெரிவித்தார். (து-213)

**முல்லைத்தீவு - திருமுறிகண்டியில்**

# வடிகால்கள் அமைத்து தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுப்பு

முல்லைத்தீவு நவ. 1

முல்லைத்தீவு, திருமுறிகண்டியில் வெள்ளம் வடிந்தோடுவதற்கான வடிகால்கள் அமைக்கப்படாததன் காரணமாக 350க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வெள்ள இடரினை எதிர்கொண்டு வருகின்றன

வீதிப்புனரமைப்பில் ஈடுபட்டவர்கள் திருமுறிகண்டியில் இருந்து கிளிநொச்சி பக்கமாக செல்லும் ஏ-9 வீதியின் இருபக்கமும் உள்ள வீடுகளுக்கு முன்பாக முக்கிய இடங்களில் பாலங்கள் அமைக்கவோ வீதிக்கு அருகிலான இரு புறத்திலும் வடிகால்கள் அமைப்பதற்கோ முயற்சிகள் எடுக்கவில்லை.

இதன் காரணமாக திருமுறிகண்டியில் இருந்து கிளிநொச்சி, கனகாம்பிகைக் குளத்துக்குச் செல்ல வேண்டிய மழை வெள்ளம் திருமுறிகண்டியிலும் இந்துபுரத்திலும் தேங்குவதன் காரணமாக இந்துபுரத்தில் இருந்து 175 வரையான குடும்பங்கள் இந்துபுரம் கிராம அலுவலர் அலுவலகத்திலும் திருமுறிகண்டி மக்கள் பாடசாலையிலும் சென்று தங்க வேண்டிய நிலைமை ஆண்டு தோறும் ஏற்படுகின்றது. அறிவியல் நகர் பல்கலைக்கழக சந்தியில்கூட பாலம் அமைக்கப்படாததன் காரணமாக பெருமளவு வெள்ளம் தேங்கும் நிலைமை ஏற்படும்.

திருமுறிகண்டியில் இருந்து கனகாம்பிகைக் குளத்துக்கு வெள்ளம் செல்லக்கூடிய வகையில் ஏ-9 வீதியின் இரு புறமும் வடிகால்கள் அமைக்க வேண்டும் என திருமுறிகண்டி, இந்துபுரம் கிராம அலுவலர் பிரிவு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ய-13)

# தருமபுரத்தில் மோ.சைக்கிளை திருடி நெல்லியடியில் சங்கிலி அறுப்பு!

## ஒருவர் மாட்டினார்; இருவர் தப்பியோட்டம்

கிளிநொச்சி, நவ. 1

தருமபுரம் பகுதியில் வீட்டு முற்றத்தில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் திருடப்பட்டு, அதே மோட்டார்சைக்கிளில் சென்று நெல்லியடியில் பெண்ணொருவரிடம் சங்கிலி அறுத்துச் சென்றார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். இருவர் தப்பித்துள்ளனர். தப்பியோடியவர்களை பொலிஸார் தேடிவருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தருமபுரத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளது. அது பற்றி தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்யப்பட்டது. இந்தநிலை யில், நெல்லியடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில், வீதியில் சென்றுகொண்டிருந்த பெண்ணிடம் நேற்றுமுன்தினம் மோட்டார் சைக்கிளில் சென்றநபர்கள், சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர்.

அவர்களின் அடையாளம், அவர்கள் பயணித்த பல்ஸர் ரக மோட்டார் சைக்கிள் என்பனவற்றின் அடையாளங்களை அவதானித்த அந்தப் பெண், நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். பொலிஸார் அது தொடர்பில் விசாரணை மேற்கொண்டிருந்த நிலையில், நெல்லியடிப் பகுதியில் வீடு ஒன்றிலிருந்து நேற்றுக்காலை குறித்த மோட்டார் சைக்கிளுடன் .வெளியே புறப்படத்தயாராக இருந்த ஒருவரைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

ஏனைய இருவர் அங்கிருந்த தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்டவர் தருமபுரம் பகுதியைச் சேர்ந்தவர்.

அவர் பற்றிய தகவல் தருமபுரம் பொலிஸாருக்கு வழங்கப்பட்டது. மேலதிக விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (து-113)





வலிகாமம் கல்வி வலயத்தால் கட்டாயக்கல்வி தொடர்பான விழிப்புணர்வுக் கூட்டம் யாழ்ப்பாணம், சாந்தை சிற்றம்பலம் வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் வலயக்கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் சிறப்புரையாற்றினார். (ம-4)

# கருத்தொருமிக்கவைக்கும் கேள்விக்கொத்து தயார்

## தமிழ் மக்களாட்சி செயற்குழு தெரிவிப்பு

**திருகோணமலை, நவ. 1**

**தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை கருத்தொருமிக்க வைக்கும் வேலைத்திட்டத்துக்கான கேள்விக் கொத்துக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. மிக விரைவில் அவற்றை மக்கள் மத்தியில் சமர்ப்பித்து அவர்களிடம் அபிப்பிராயங்கள் பெறப்படும் என்று சட்டத்தரணி எப்.எஸ். விஜயகுமார் தெரிவித்தார்.**

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை கருத்தொருமிக்க வைக்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ள தமிழ் மக்களாட்சி செயற்குழுவின் செய்தியாளர் மாநாடு திருகோணமலையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

தமிழ் மக்களாட்சி செயற்குழுவின் ஏற்பாட்டாளர்களான திருகோணமலை மறைமாவட்ட ஆயர் கலாநிதி நோயல் இமானுவேல், திருகோணமலை தென்கையிலை ஆதீனத்தின் குரு முதல்வர் தவத்திரு அகத்தியர் சுவாமிகள் ஆகியோரும் இந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு விளக்கமளித்தனர்.

'தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் மற்றும் தமிழ்த் தேசியத்தை மக்களின் இயல்பான கருத்துக்கள் ஊடாக வெளிப்படுத்தி அவற்றை ஆவணப்படுத்த வேண்டும். தமிழ்த் தேசியக் கோரிக்கைகளை முன்வைக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தக் கோரிக்கைகளில் தெளிவான நிலைப்பாட்டில் இருக்கும் வகையில் மக்களின் கருத்துக்களானவை கேள்விகள் மூலமாக உறுதிப்படுத்தப்படும். இந்தவேலைத்திட்டம் தொடர்பாக அரசியல் பத்தி எழுத்தாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், ஊடக நிறுவனங்களின் செய்தியாசிரியர்கள் ஆகியோருடனும் இது பற்றி கலந்துரையாடியுள்ளோம்' என்று சட்டத்தரணி விஜயகுமார் தெரிவித்தார்.

'ஈழத்தமிழ் மக்கள் கூட்டுரிமையின் அடிப்படையில் அமைந்த கோரிக்கைகளை முன்வைத்து அதனை ஆவணப்படுத்துவதே தமிழ் மக்களாட்சி செயற்குழுவின் பிரதான நோக்கம். மக்களின் பங்கேற்பு ஜனநாயகத்தை இணைய வழி மூலமாக உறுதிப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன' என்று ஆயர் நோயல் இமனுவேல் தெரிவித்தார்.

'தமிழ்த் தேசிய பரப்பு எல்லை மற்றும் தமிழ்த் தேசிய கோட்பாட்டின் அடிப்படைகளை தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏற்கும் வகையில் மக்களின் கருத்துக்கள் அமைய வேண்டும். மக்களின் கருத்துக்கள் அவ்வாறு ஒருமித்த குரலில் அமையுமாக இருந்தால், தமிழ் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதனை மேலும் உறுதிப்படுத்துவதற்கான தங்கள் செயற்பாடுகளை தீவிரப்படுத்த வேண்டிய நிலை ஏற்படும்' என்று தவத்திரு அகத்திய சுவாமிகள் தெரிவித்தார்.

செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த சட்டத்தரணி விஜயகுமார், ''தமிழ் தேசிய நிலைப்பாட்டில் மக்கள் தெளிவாக உள்ளனர். அதனை செம்மைப்படுத்தி ஆவணப்படுத்துவதே தமது நோக்கம். அரசியல் கட்சிகளை ஒற்றுமைப்படுத்துவது அல்லது அவர்களை ஒரே கூட்டமைப்பாக செயற்பட வைப்பது எமது நோக்கம் அல்ல. தமிழ்த் தேசியக் கருத்தியலை ஒருமித்த குரலில் பேச வைப்பதே எமது நோக்கம்" என்றும் அவர் தெரிவித்தார். (த-இ)

# விலையுயர்வுக்கு எதிராக யாழில் சுவரொட்டிகள்

யாழ்ப்பாணம், நவ. 1

அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்தை மேற்கொள்ளும் அரசின் செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. மக்கள் விடுதலை முன்னணியினரே குறித்த சுவரொட்டிகளை ஒட்டியுள்ளனர்.

சுவரொட்டியில், 'வீம்பு வார்த்தை, தம்பட்டங்களை நிறுத்துக!, அத்தியாவசியப் பொருள்களின் விலையைக்குறை! விலை உயர்வுக்கு உடனடியாக தீர்வை வழங்கு!' போன்ற வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன. (த-125)







மன்னார் பஸ் நிலையத்தில்

# பாலூட்டும் தாய்மாருக்காக இரண்டு அறைகள் திறப்பு

மன்னார், நவ. 1

பாலூட்டும் தாய்மார்களுக்காக மன்னார் புதிய பேருந்து நிலையக் கட்டடத்தில் இரண்டு அறைகள் அமைக்கப்பட்டு நேற்றுமுன்தினம் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் மன்னார் நகர சபை தலைவர், உபதலைவர், செயலாளர் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர். (த-213)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது



வவுனியா, நவ. 1

வவுனியா, மூன்றுமுறிப்பு பகுதியில் கேரளக் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். குறித்த பகுதியில் கஞ்சா விற்பனை இடம்பெறுவதாக விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து நேற்றுமுன்தினம் வீடொன்றில் நடத்திய சோதனையில் 3 கிலோ 700 கிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். அதனை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டிலேயே அதே பகுதியைச் சேர்ந்த ஒருவர் கைதுசெய்யப்பட்டார். அவர், மேலதிக விசாரணைக்காக வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (த-110)




**"பதின்மூண்டாம் திருத்தத்தை அமுலாக்கச் சொல்லி அரசாங்கத்துக்கு நெருக்குதல் குடுங்கோ" எண்டு ரெலோவின்ர ஏற்பாட்டில எல்லாத் தமிழ்க் கட்சியளும் ஒண்டாக் கூடிக் கதைக்கப் போகினமெல்லோ. அந்தக் கூட்டத்துக்கு வழமைபோல எல்லாத்திலயும் புறிம்பு காட்டுற முன்னணிக்காரர் கலந்து கொள்ள மாட்டினம் எண்டு எல்லாருக்குமே தெரியும். அப்பிடி அவை கலந்து கொண்டால் அது உலக அதிசயம் தான். எண்டாலும் ஒரு மரியாதைக்கு அவைக்கும் அழைப்பு விட்டிருக்காம்.**

**அவைதான் வேற கூட்டணியில இருக்கிற கட்சிக்காரர். ஆனால் ரெலோ இருக்கிற கூட்டமைப்பின்ர மெயின் பங்காளியான தமிழரசுக்கட்சியும் இந்தக் கூட்டத்தில பங்குபற்றாயினம் போலதான் கிடக்கு. "அவை சொல்லி நாங்கள் போறதோ? நாங்கள் தான் எல்லாத்தையும் தொடக்கவும் வேணும், நாங்கள் தான் எல்லாத்துக்கும் தலைமை தாங்கவும் வேணும்" எண்ட கெப்பரில தமிழரசுக்காரர் போறேலை எண்டு நிக்கினமாம். பகிடி என்னெண்டா தமிழரசுவின்ர தலைவர் இந்தக் கூட்டத்துக்கு போறதுக்கு அந்தரப்படுகிறார், ஆனால் சட்டாம்பியார் தான் 'அந்தக் கூட்டத்துக்கு எட்டியும் பாக்கக்கூடாது' எண்டு கோடு கிழிச்சிருக்கிறாராம். கட்சியின்ர தலைவருக்கே ஓர்டர் போடுற அளவுக்கு சட்டாம்பியார் சொல்லுறதுதான் அந்தக் கட்சிக்க நடக்குது போல.**

**ஆனால் இந்தச் சட்டாம்பித்தனத்தை தன்ர கட்சியோட மாத்திரம் வைச்சிருந்தால் பரவாயில்லை. வேற கட்சிக்காரரையும் இதே தோரணையில கொண்ட்ரோல் பண்ணப் பாக்கிறாராம் சட்டாம்பி. ரெலோ நடத்துற அந்தக் கூட்டத்துக்கு மனோகணேசனும் வாறதெண்டு சொல்லியிருக்கிறார். இந்தக் கதை கேள்விப்பட்டவுடன மண்ணெண்ணெய் பட்ட சாரைப்பாம்பு மாதிரி சட்டாம்பியார் மனோ கணேசனிட்டையையே "அதெப்பிடி நாங்கள் போகாத கூட்டத்துக்கு நீங்கள் போகலாம். அப்பிடி நீங்கள் போய் அவையைப் பெரியாக்களா மாத்த வேண்டாம்" எண்டு கொஞ்சம் இறுக்கமாச் சொல்லியிருக்கிறாராம். "ஓம் அண்ணை, பாக்க லாம் அண்ணை, போகேலை அண்ணை" எண்டு சொல்ல மனோ கணேசன் என்ன தமிழரசுத்தலைவரோ?**

**"அந்தக் கூட்டத்துக்கு நான் வாறதெண்டு சொல்லிட்டன். அந்த முடிவில மாற்றமில்லை. நீங்கள் போகாத கூட்டத்துக்கு நாங்கள் போகக் கூடாதெண்டு சட்டமில்லையே" எண்டு சிரிச்சுக் கொண்டே மனோகணேசன் சொல்லியிருக்கிறார். சட்டாம்பிக்கு முகம் அப்பிடியே தொங்கிப் போட்டுதாம். தமிழரசுக்க தான் சட்டாம்பியாரின்ர பருப்பு வேகும். அதை எல்லாக் கட்சியிலையும் வேக வைக்க நினைச்சா இப்பிடித்தான் அவமானப்படவேண்டியிருக்கும். அந்தக் கோபத்திலதான் முந்தநாள் கொழும்பில 'எல்லாத் தேர்தல்களையும் விகிதாசார முறைப்படி வைக்கவேணும்' எண்டு எல்லாச் சிறுபான்மைக் கட்சிகளும் கலந்து கொண்ட கூட்டத்துக்கு சட்டாம்பியார் தன்ர தலையைக் காட்டேலையாம்.**

**ரெலோ தலைமையில நடக்கப்போற இந்தக் கூட்டத்தைப் பற்றி இன்னொரு தகவல். மனோகணேசன் கூட்டத்துக்கு வாறது முற்றாயிட்டுது. ஆனால் ரவூப் ஹக்கீம் வாறதுதான் டவுட். கொரோனாக் காலத்தில மினக்கெட்டு கொழும்பில இருந்து வரவேணுமே எண்டதுதான் ஹக்கீமின்ர பிரச்சினையாம். வேற எந்தக் கொள்கை ரீதியான பிரச்சினையும் இல்லையாம். ஆனாலும் சிலவேளையில வசதிப்பட்டால் ஆள் வந்தாலும் வரக்கூடுமாம்.**



- பட்சி

# சொற்போர் தொடுத்தால் கன்னத்தில் அறை விழும்

## பங்காளிக்கட்சிகளுக்கு எச்சரிக்கை

கொழும்பு, நவ. 1
ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவர்களை இலக்குவைத்து பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் தொடர்ந்தும் சொற்போர் தொடுத்தால், அவர்களின் கன்னத்தில் அறைவதற்குக்கூட நாம் தயார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி எச்சரித்துள்ளார்.

அரசுக்குள் இருந்து கொண்டு சுக போகங்களை அனுபவித்தும் விமர்சனங்களை முன்வைப்பதையும் விட, வெளியில் சென்று முதுகெலும்புடன் விமர்சனங்களை முன்வைப்பதே மேல்.

எங்கள் கட்சித் தலைவர்களை விமர்சனங்களால் தொடர்ந்தும் தாக்கினால், பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களாகியநாம் பங்காளிகளின் கன்னத்தில் அறையக்கூட தயாராகவே இருக்கின்றோம். -என்றார். (ம-4)

# புதிய பட்ஜெட்டால் மக்களுக்கு அதிர்ஷ்டம்

## பஸில் நம்பிக்கை




கொழும்பு, நவ. 1
நாட்டுக்கும், மக்களுக்கும் அதிர்ஷ்டமளிக்கும், புதிய வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் என்று நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கண்டி தலதா மாளிகைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர், அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில், புதிய வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் வழிபாடுகளில் ஈடுபட்டு ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் தலதா மாளிகைக்கு வருகை தந்துள்ளேன்.

நாட்டுக்கும், மக்களுக்கும் நல்லதொரு வரவு-செலவுத் திட்டத்தை கொண்டு வருவதற்கு எனக்கு அதிர்ஷ்டம் கிடைக்கும். சீனா, மக்கள் வங்கியை கறுப்புப் பட்டியலில் இட்டமை தான் தற்போது நாட்டில் பேசுபொருளாக இருக்கின்றது. இதனால் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை -என்றார். (ம-4)

# ஞானசார தேரருடன் பஸில் இருக்கின்றார்

## அதாவுல்லா, விமல் தரப்பின் பின்னணியில் சீனா; நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் விமர்சனம்



**கொழும்பு, நவ. 1**
**‘பஸில் ராஜபக்ஸவும் ஞானசார தேரருடன் உள்ளார் என்பது தெளிவாகியுள்ளது. இதனால், அரசுக்கு ஆதரவளித்த முஸ்லிம் உறுப்பினர்களின் கடைசி ஆயுதமும் புஷ்வாணமாகியுள்ளது’ என்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.**

அத்துடன் சீனாவுக்கு துறைமுக நகரம், இந்தியாவுக்கு மேற்கு முனையம் என வழங்கப்பட்டபோது அமைதியாக இருந்த அதாவுல்லா உட்பட விமல் கூட்டணி அமெரிக்காவுக்கு மின்னுற்பத்தி நிலையத்தை வழங்கும்போது கூட்டாக எதிர்ப்பதன் பின்னணியில் சீனா உள்ளதா என்ற சந்தேகம் நிலவுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு நேற்றுமுன்தினம் கருத்து வெளியிடும்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசிலுள்ள கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அதாவுல்லா, ஞானசார தேரர் தொடர்பாக வெளியிட்ட கருத்தையும் அதற்கு அமைச்சர் பஸில் ராஜபக்ஸ வழங்கிய பதிலையும் ஊடகங்கள் வாயிலாக அறியக் கிடைத்தது.

அரசுக்கு ஆதரவளிக்கும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பஸில் ராஜபக்ச இனவாதமற்றவர், முஸ்லிம்களுக்கு சார்பானவர், அவர் ஜனாதிபதியானால் இனவாதிகளை அடித்து விரட்டிவிடுவார் என்ற பரப்புரையையே இதுவரை காலமும் மேற்கொண்டுவந்தனர். இவ்வாறு அடுத்த தேர்தலில் பஸில் ராஜபக்ஸவுக்கு ஆதரவாக பரப்புரை செய்ய அவர்கள் வைத்திருந்த கடைசி ஆயுதமும் இதன்மூலம் புஷ்வாணமாகிவிட்டது. பஸில் ராஜபக்ச உட்பட அனைத்து ராஜபக்சக்களும் ஞானசார தேரரின் பின்னால் உள்ளனர்.

ராஜபக்சக்களின் அரசியல் நிகழ்ச்சி நிரலையே ஞானசார தேரர் நிறைவேற்றுகிறார்.

இதுவரைகாலமும் வாயை மூடியிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் அதாவுல்லா இப்பொழுதாவது வாயை திறந்திருப்பது பாராட்டுக்குரியது.

அமைச்சுப் பதவி கிடைக்கவில்லை, அவர் எதிர்பார்த்த சலுகைகள் எதுவும் கிடைக்கவில்லை. இருந்தும் இருபதாம் திருத்த சட்டவரைவுக்கு வாக்களித்தார், துறைமுக நகர சட்டவரைவுக்கு ஆதரவளித்தார். காதி நீதிமன்றம், பசுவதை தடை என பல சட்டதிருத்தங்கள் தொடர்பாக பேசப்பட்டபோது அமைதியாக இருந்தார்.

ஆனால் தொடர்ந்தும் இவ்வாறு அமைதியாக இருந்தால் தனது அரசியல் இருப்பே கேள்விக்குறியாக மாறிவிடும் என உணர்ந்து இப்போது பேசியுள்ளார் -என்றார். (த-இ)

# ‘ஒரு நாடு ஒரு சட்டம்’ இதில் உடன்பாடில்லை

## நீதியமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 1
‘ஒரு நாடு ஒரு சட்டம்’ செயலணி ஸ்தாபிக்கப்பட்டமை தொடர்பில், எனக்கு எதுவும் தெரியாது. இதில் எனக்கு உடன்பாடும் இல்லை என்று நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

செயலணியை உருவாக்குவது தொடர்பில் என்னுடன் கலந்தாலோசனை மேற்கொள்ளவில்லை. எனக்கு இது குறித்து மகிழ்ச்சியில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை செயலணியில் இடம் பெற்றுள்ள முஸ்லிம் உறுப்பினர்கள் எவருக்கும் அந்தச் செயலணியின் தலைவராக் ஞானசார தேரர் நியமிக்கப்படுவார் என்பது தெரியாது என்று தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த செயலணிக்கு தன்னை நியமித்திருப்பது தொடர்பில் தனக்கு அறிவிக்கப்படவில்லை என்று கொழும்பு மாநகர சபையின் உறுப்பினர் கலீல் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

அதேவேளை அந்த நியமனத்தை அவர் ஏற்றுக்கொண்டால் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவரது கட்சித் தலைமை தெரிவித்துள்ளது. (ம-4)

# 3 அமைச்சர்களை பதவி நீக்கச் சதி?

## ஆளுங்கட்சி எம்.பிக்கள் திட்டம்

கொழும்பு, நவ. 1
அமைச்சரவைத் தீர்மானத்தை பகிரங்கமாக விமர்சித்தனர் என்ற குற்றச்சாட்டில், அமைச்சர்கள் மூவரைப் பதவி நீக்குவதற்கான கோரிக்கையை, அரசின் பின்வரிசை உறுப்பினர்கள் முன்வைத்துள்ளனர்.

அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோரை நீக்குவது தொடர்பிலேயே ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச ஐரோப்பிய பயணத்தை முடித்து நாடு திரும்பியவுடன், பின்வரிசை உறுப்பினர்கள் அவரைச் சந்திக்கவுள்ளனர். (ம-4)

# பாடசாலை கல்வி நடவடிக்கை வரும் வாரங்களில் வழமைக்கு

கொழும்பு, நவ. 1
நாட்டில் எதிர்வரும் வாரங்களில் பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளை வழமைபோன்று மேற்கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுவதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

இதுவரை இரண்டு கட்டங்களாக நாட்டின் அனைத்து ஆரம்பப் பாடசாலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின் தற்போது மாணவர்களின் வருகையில் அதிகரிப்பைக் காண முடிந்துள்ளது. ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் வருகையும் சிறந்த மட்டத்தில் காணப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதேவேளை நாட்டில் எதிர்வரும் 8ஆம் திகதி தொடக்கம் தரம் 10, 11, 12, 13 ஆம் வகுப்புக்களை ஆரம்பிக்கத்தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# சிங்கள சிறுகட்சிகளின் இருப்பும் கேள்விக்குறி

## மனோ கணேசன் தெரிவிப்பு



**கொழும்பு, நவ. 1**

**சிறுகட்சி என்றால் தமிழ், முஸ்லிம் சிறுபான்மை கட்சிகள் மட்டுமல்ல. ஜே.வி.பி. போன்ற அரசியல் சிறுகட்சிகளினது இருப்புக்களையும் இந்த அரசு இன்று கேள்விக்கு உள்ளாக்கியுள்ளது என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.**

தேர்தல் முறைமை சீர்திருத்தம் தொடர்பில் நேற்று நடைபெற்ற சிறு கட்சிகளின் கலந்துரையாடலில் கலந்துகொள்ளும்படி ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திசாநாயக்காவை ஏற்பாட்டாளர்களின் சார்பாக நான் நேரடியாக அழைத்திருந்தேன். அதேபோல் நண்பர் விஜித ஹேரத்துக்கும் அழைப்பு விடுத்திருந்தேன். நிகழ்வில் கலந்துகொள்வதாகவே இருவரும் என்னிடம் கூறினார்கள். ஆனால், ஜே.வி.பி. சார்பாக எவரும் கலந்துக் கொள்ளவில்லை. இதையிட்டு நான் கவலையடைகிறேன் என்று அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை, 20ஆம் திருத்தத்தின் மூலம் மேலும் பலமாக்கப்பட்ட பின்னணியில், நாடாளுமன்றத்தையும் இரண்டு கட்சிகளுக்கு மட்டும் வரையறைசெய்ய இந்த அரசும் முயற்சிக்கின்றது. பல கட்சி பிரதிநிதித்துவங்களுக்கு நாடாளுமன்றமும், மாகாண சபைகளும் இன்றைய விகிதாசார முறையின் கீழேயே சாத்தியம்.

எனவே இத்தகைய பன்மைத் தன்மை வாய்ந்த பிரதிநிதித்துவம் மூலமே நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை கண்காணிக்க முடியும். இது இந்நாட்டு ஜனநாயகத்துக்கு அவசியமாகும்.

எனவே, இந்த ஜனநாயகத்தை பாதுகாக்கும் பல கட்சி ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் விகிதாசார தேர்தல் முறைமையையே அவசியம் - என்றார். (த-இ)

# பாலியல் துர்நடத்தையில் ஈடுபட்ட இந்தோனேஷியப் பெண்கள் கைது

கொழும்பு, நவ.1

கல்கிசை சேரம் மாவத்தை பிரதேசத்தில் பாலியல் தொழிலில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்படும் 5 இந்தோனேஷியப் பெண்கள் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அங்குள்ள விடுதி ஒன்று சுற்றிவளைக்கப்பட்டு சோதனையிடப்பட்டபோதே இவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த பெண்கள் கல்கிசை நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது, அவர்களை பிணையில் விடுவிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ச)

# மஹிந்தானந்த மீது மஹிந்த பாய்ச்சல்

சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கரிம உர விவகாரம் தொடர்பில், விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மீது, பிரதமர் மஹிந்த ராஜபக்ச கடும் கோபத்தில் உள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவை தொலைபேசியில் தொடர்புகொண்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ச அவரைக் கடுமையாக விமர்சித்துள்ளார் என்று ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கரிம உரத்தை நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று சீனத் தூதுவரிடம் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார் என்று அளுத்கமகே தெரிவித்த கருத்துக்கே பிரதமர் தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார்.

எனக்கும் சீனத் தூதுவருக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அவ்வாறான கருத்துக்கள் எதனையும் நான் வெளிப்படுத்தவில்லை.

சந்திப்பில் அமைச்சர் மஹிந்தானந்த பிரசன்னமாகியிருக்காத நிலையில் ஏன் அவர் அந்தக் கருத்தைத் தெரிவித்தார். சீனாவிடம் இருந்து இலங்கை கடன் பெறுவது தொடர்பில் சந்திப்பில் பிரதான கவனம் செலுத்தப்பட்டது. உர விவகாரம் தொடர்பில் சீனத் தூதுவருடன் மீண்டும் கலந்துரையாடப்படும் என்று பிரதமர் தெரிவித்துள்ளார். (ம-4)

# இனவாதத்துக்கு இடமளிக்கோம்

## சுதந்திரக்கட்சி நம்பிக்கை



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்றுமே இனவாதத்துடன் நடந்து கொண்டதில்லை. அனைவரையும் அரவணைத்துச் செல்ல வேண்டும் என்ற நோக்கத்துடனேயே செயற்பட்டு வருகின்றது என்று தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில், இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்கள் உடனான கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

பௌத்த கொடியை ஏந்திக்கொண்டு செல்வதன் மூலம் மாத்திரம் வெற்றியை நோக்கிப் பயணிக்க முடியாது.

எங்கள் கட்சி பல தசாப்தங்களாக இந்த நாட்டை ஆட்சி செய்த ஒரு கட்சியாகும். அன்று எங்களுடைய கட்சியின் தலைவி முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க பெருந்தோட்ட மக்களுக்கான வாக்களிக்கும் உரிமையைப் பெற்றுக்கொடுத்தார். தொழில் அமைச்சர் என்ற வகையில் நான் அவர்களுக்கான ஆயிரம் ரூபா சம்பளத்தைப் பெற்றுக்கொடுத்தேன். எனவே எங்களுடைய கட்சி தொழிலாளர்களுக்குத் தேவையான விடயங்களை அந்தந்தக் காலத்தில் செய்து கொடுத்துள்ளது.

நல்லாட்சி அரசில் எங்களுடைய கட்சியைச் சார்ந்தவர்களுக்கு அவர்கள் எதிர்பார்த்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவில்லை. அதற்கான நிதிகள் ஒதுக்கப்படவில்லை. இதன்காரணமாக எங்களுடைய ஆதரவாளர்கள் அந்த அரசை ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். இவ்வாறான ஒரு அரசியல் சூழ்நிலையிலேயே கடந்த தேர்தலில் எங்களுடைய கட்சி தனித்து போட்டியிடுவது என்று முடிவெடுத்து 14 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது -என்றார். (ம-4)

# அரிசி விலையுயர்வுக்குத் தீர்வாக வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி

கொழும்பு, நவ. 1

சந்தையில் நிலவும் அரிசி விலையுயர்வுக்கும் தீர்வு காணும் வகையில் இந்தியா, பாகிஸ்தான் மற்றும் மியன்மார் ஆகிய நாடுகளிலிருந்தும் அரிசி இறக்குமதி செய்யப்படுகின்றது என்று வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் சந்தையில் அரிசியின் விலை அதிகரித்துக் காணப்பட்டது. இதனையடுத்து அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்பட்டது. எனினும் அரிசித் தட்டுப்பாடு காரணமாக அது நீக்கப்பட்டது.

இந்த நிலையில் சந்தையில் அரிசியின் விலை தொடர்ந்தும் அதிகரித்துக் காணப்படுகின்றது. புறக்கோட்டை சந்தையில் ஒரு கிலோ நாட்டரிசி 140 ரூபாவுக்கும், ஒரு கிலோ சம்பா அரிசி 150 ரூபாவுக்கும், ஒரு கிலோ கீரிச்சம்பா அரிசி 220 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றது. அரிசி ஆலை உரிமையாளர்களால் புதிய விலை அறிவிக்கப்பட்டது. எனினும் குறித்த விலையை மீறி அதிக விலையில் சந்தையில் அரிசி விற்பனை செய்யப்படுகின்றது.

அதிகரித்த அரிசி விலையைக் கட்டுப்படுத்துவதற்காக அரசு இந்தியாவிலிருந்து ஒரு இலட்சம் மெற்றிக் தொன் அரிசியை கட்டம்கட்டமாக இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இறக்குமதி செய்யப்படுகின்ற அரிசி சதொச ஊடாக விற்பனை செய்யப்படும். நுகர்வோரால் ஒரு சந்தர்ப்பத்தில் 5 கிலோ அரிசி மாத்திரமே கொள்வனவு செய்ய முடியும் என்று வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-4)

# விவசாயிகள் நஷ்டமடைந்தால் இழப்பீடுவழங்க வேண்டும்

## ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

கொழும்பு, நவ. 1

விவசாயிகள் பரிந்துரைக்கப்பட்ட சேதன உரங்களைப் பயன்படுத்தி பயிர்ச்செய்கை மேற்கொண்ட பின்னர் நஷ்டம் அடைந்தால், இழப்பீடு வழங்கும் திட்டம் வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான பீ.ஹரிசன் தெரிவிக்கையில்,

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சேதன உரங்களைப் பயன்படுத்துவதற்கு உள்ளூர் விவசாய சமூகம் மத்தியில் அரசு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். அரசு விவசாயிகளுக்கு உத்தரவாதம் வழங்க வேண்டும். முன்னாள் அரசின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற சம்பள அதிகரிப்பு காரணமாக அரச துறை ஊழியர்கள் பிழைத்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் இந்த அரசில் விவசாயிகள் வஞ்சிக்கப்படுகின்றனர் -என்றார். (ம-4)

# ஐக்கிய மக்கள் சக்தி அரசு விவசாயிகளைப் பாதுகாக்கும்

## சஜித் நம்பிக்கை

கொழும்பு, நவ. 1

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் அமையவுள்ள புதிய அரசு விவசாயிகளையும், அவர்களின் உரிமைகளையும் பாதுகாப்பதற்கான சட்டத்தை அறிமுகப்படுத்தும் என்று எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாங்கள் ஒரு உழவர் சாசனத்தை அறிமுகப்படுத்துவோம். விவசாயிகள் தங்கள் விருப்பப்படி உரம் மற்றும் பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்தி விவசாயம் செய்வதற்கான உரிமைகள் உறுதி செய்யப்படும். அரசமைப்பால் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் பட்டியலில் விவசாயிகளின் உரிமைகளையும் உள்ளடக்குவோம் -என்றார். (ம-4)

உலக நாடுகளை அச்சுறுத்தும்

# ஏ.30 வைரஸ் தொடர்பில் இலங்கையும் அவதானம்




கொழும்பு, நவ. 1

**உலகின் பல நாடுகளிலும் அவதானிக்கப்பட்டுவரும் ஏ.30 வைரஸ் தொடர்பில் இலங்கையும் அவதானம் செலுத்தியுள்ளது என்று மருந்துப் பொருள்கள் வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், திருமணம் மற்றும் இறுதிச் சடங்குகளில் சுகாதார ஆலோசனைகளைப் புறக்கணிப்பதால் வைரஸ் பரவும் அபாயம் அதிகம் உள்ளது. ஏ.30 வகை வைரஸ் பைஸர், அஸ்ராஜெனகா உள்ளிட்ட தடுப்பூசிகளுக்கு கட்டுப்படாது. இது பரவினால் பெரும் அசௌகரியம் ஏற்படும் என்று உலகமே உற்று நோக்குகிறது. எனினும் இது தொடர்பில் நாமும் அவதானத்துடன் இருக்கின்றோம். கொரோனா முழுமையாக இல்லாதொழிக்கப்பட்டுள்ளது என்று எண்ணி அசண்டையீனமாகச்செயற்பட்டால் எதிர்வரும் 4 வாரங்களின் பின்னர் மோசமான விளைவுகளை நாம் அனுபவிக்க நேரிடும். -என்றார். (ம-4)

## எதிர்வரும் மாதங்களில் தொற்று அதிகரிக்கும்!

சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 1

எதிர்வரும் மாதங்களில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை நிச்சயமாக அதிகரிக்கும் என்று சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் சுகாதார அமைச்சின் குடும்ப மருத்துவ ஆலோசகரான மருத்துவர் மல்காந்தி கல்ஹேன தெரிவிக்கையில்,

தற்போது மக்கள் வெளியிடங்களுக்குச் செல்லும்போது பொறுப்பற்ற முறையில் செயற்பட ஆரம்பித்துள்ளனர்.

சுகாதார வழிகாட்டல்கள் மற்றும் நடைமுறைகள் புறக்கணிக்கப்படுகின்றன.

பொதுப்போக்குவரத்தைப் பயன்படுத்தும்போதும் ஏனைய செயற்பாடுகளில் பங்கேற்கும்போதும், சுகாதார வழிகாட்டல்களை மக்கள் நிச்சயம் கடைப்பிடிக்க வேண்டும். இல்லையெனில் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பைத் தவிர்க்க முடியாது -என்றார். (ம-4)

## மூன்றாவது தடுப்பூசி செலுத்தும் பணிகள் இன்றுமுதல் ஆரம்பம்

கொழும்பு, நவ. 1

முதலாம்திகதி தொடக்கம் (இன்று) மூன்றாவது தடுப்பூசி வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சில் அண்மையில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

மூன்றாவது தடுப்பூசி செலுத்தும் பணி எதிர்வரும் முதலாம்திகதி (இன்று) முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன் இதன்போது சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சுற்றுலாத்துறைகளில் பணியாற்றுபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

அத்துடன் இந்தத் திட்டத்தை ஆரம்பிப்பதற்காக ஒரு மில்லியன் பைஸர் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் வாரந்தோறும் 400,000 தடுப்பூசிகள் நாட்டை வந்தடையவுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-ச)

## தடுப்பூசி செலுத்த இளைஞர்கள் அச்சம்

விரைவில் தீர்வு

கொழும்பு, நவ. 1

வெளிநாடு செல்ல எதிர்பார்த்துள்ள இளைஞர்கள் மத்தியில் எழுந்துள்ள தடுப்பூசி அச்சம் தொடர்பில், விரைவில் தீர்வு வழங்கப்படும் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சினோபார்ம், அஸ்ராஜெனகா மற்றும் ஸ்புட்னிக் வி தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வதில் இளைஞர்கள் மத்தியில் அச்சம் இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரைகளைக் கவனத்தில் கொள்ளாது, சில நாடுகள் அறிவிப்புக்களை வெளியிட்டுள்ளன. எனினும், படிப்படியாக அந்த நாடுகள் ஒரு நிலைப்பாட்டுக்கு வருகின்றன.

உலக சுகாதார ஸ்தாபனம் தடுப்பூசிகளை ஏற்றுக்கொண்டால், அனைத்து நாடுகளும் அவற்றை ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு வரவேண்டியிருக்கும்.

இருந்தபோதும் இந்தப் பிரச்சினையை எமது பக்கத்தில் தீர்ப்பதற்கான முயற்சிகளை நாம் முன்னெடுப்போம். -என்றார். (ம-4)

## 700 கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருள் இலங்கைக்குள்

கொழும்பு, நவ. 1

தெமட்டகொட ருவன் என்பவரால், கடல் வழியாக இலங்கைக்குள் 700 கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருள்கள் கடத்தப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

720 கிலோக்கிராம் ஹெரோய்ன், 321 கிலோகிராம் ஐஸ் மற்றும் 30 கிலோகிராம் ஹசீஸ் போதைப்பொருள்கள் கடத்தப்பட்டுள்ளன என்று ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இது தொடர்பில் ருவன் எனும் குறித்த நபர், சட்டவிரோத சொத்து மற்றும் வருமான விசாரணை பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் தற்போது கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவரிடமிருந்து ஆறு சொகுசு வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார். (ம-4)



பங்களாதேஷ்

## சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை

கொழும்பு; நவ. 1

பங்களாதேஷ் சுற்றுலாப் பயணிகள் நேற்று முன்தினம் இலங்கைக்கு வருகை தந்தனர். கொரோனா நோய்த்தொற்று காரணமாக பங்களாதேஷ் சுற்றுலாப் பயணிகளின் வருகை இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்தநிலையில் நேற்றுமுன்தினம் அந்த நாட்டு சுகாதாரத்துறையைச் சேர்ந்த 50 சுற்றுலாப் பயணிகள் குழுவொன்று டாக்காவில் இருந்து இலங்கைக்கு வந்தது. (ய-இ)

## கட்டுப்பாடுகள் பல நீக்கம் 25 வழிகாட்டல்கள் வெளியீடு

கொழும்பு, நவ. 1

கொரோனாத் தொற்றுக் காலத்தில் நடைமுறையில் இருந்த பல கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ள நிலையில், எதிர்வரும் 15 ஆம்திகதி வரை நடைமுறைக்கு வரும் வகையில் 25 புதிய சுகாதார வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்த்தனவால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

மாகாணங்களுக்கிடையிலான பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுகின்றது. பயணிகள் பாதுகாப்பான பயணங்களை மேற்கொள்ளவேண்டும். ஆசன எண்ணிக்கைக்கு ஏற்ப பொதுப் போக்குவரத்து மற்றும் குளிரூட்டப்படாத பஸ்களில் ஜன்னல்கள் திறக்கப்பட்ட நிலையில் போக்குவரத்துக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். பயணிகள் கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும். வேலைத்தளங்களுக்கு ஊழியர்கள் மட்டுப்படுத்தப்பட வேண்டும். வீட்டிலிருந்து வேலை ஊக்குவிக்கப்படுகின்றது. பொது ஒன்றுகூடல்கள் ஊக்குவிக்கப்பட மாட்டாது. வீடுகளை விட்டு தேவையற்ற பயணங்களைத் தவிர்க்க வேண்டும். கல்வி அமைச்சால் தீர்மானிக்கப்படும் திகதிகளில் பாடசாலைகளின் சாதாரண தர மற்றும் உயர்தர வகுப்புக்களை மீள ஆரம்பிக்க அனுமதிக்கப்படும். பாலர் பாடசாலைகள் 50வீத திறனில் தொடர்ந்தும் செயற்படலாம்.

பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட உயர்கல்வி நிறுவனங்கள் குறிப்பிட்ட வழிகாட்டுதல்களின் படி செயற்பட முடியும். தொழில் பயிற்சி நிறுவனங்கள் 50 வீத திறனில் செயற்பட முடியும். மண்டபங்களில் அதிகபட்சம் 150 நபர்களுக்குள் கூட்டங்களை நடத்தலாம்.

தனியார் ஒன்று கூடல்கள் அதாவது வீடுகளில் ஒன்றுகூடும்போது 10 நபர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

திறந்த சந்தைகள் மற்றும் நடமாடும் விற்பனையாளர்கள் கடுமையான கண்காணிப்பின் கீழ் மொத்த வணிகத்துக்காக திறக்க அனுமதிக்கப்படுவர். கடைகள், மளிகைப் பொருள்கள், மருந்தகங்கள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் மூன்றில் ஒன்று திறன் கொண்டவையாக இருக்க முடியும். நிதி நிறுவனங்கள் அதிகபட்சமாக 15 நபர்களுடன் ஒரே நேரத்தில் திறக்க அனுமதிக்கப்படும். கண்காட்சிகள் மற்றும் மாநாடுகளை டிசெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கலாம் -என்றுள்ளது. (ம-4)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# விரும்பப்படுவதில்லை விலாங்குமீன்கள்!

ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பார்கள். ஒன்றாக இருந்தவர்கள் தமக்குள் முட்டி மோதிக்கொள்கையில்தான் அவர்களுக்குள் அதுவரை இருந்த பல இரகசியங்கள் வெளியே வரும். கோத்தாபய அரசாங்கத்துக்குள் இருந்த பிளவு தீவிரமானதையடுத்து ஒன்றன்பின் ஒன்றாக ராஜபக்சக்களின் தில்லுமுல்லுகள் வெளிவர ஆரம்பித்துள்ளன. அமைச்சுப் பதவிகளை வகிப்பவர்கள்கூட தற்போது தமது அதிருப்தியை அப்பட்டமாக வெளிப்படுத்த ஆரம்பித்துள்ளனர்.

'யுகதனவி' மின்நிலையத்தின் 40 வீதமான பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கிய விவகாரத்தில் பல்வேறு முறைகேடுகள் உள்ளன. குறித்த அமெரிக்க நிறுவனம் எந்தவிதமான விலைமனுக்கோரலிலும் பங்குபற்றவில்லை. பஸிலின் தன்னிச்சையான முடிவுகளால்தான் இந்தப் பங்குகள் அந்த நிறுவனத்துக்கு வழங்கப்பட்டன' என்று வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். 'முன்னைய அரசுகளிலும் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன. ஆனால், எந்த அரசும் இந்த அரசுபோன்று முறைகேடுகளில் ஈடுபடவில்லை. இதை அனுமதித்தால் எதிர்காலச் சந்ததி எம்மைச் சபிக்கும்' என்றும் தன் கருத்தை ஆழமாகப் பதிவுசெய்துள்ளார் கம்மன்பில.

துறைசார் அமைச்சர் என்ற ரீதியில் கம்மன்பிலவின் கருத்தும் இந்த விடயத்தில் அவருக்கு இருக்கும் கோபமும் அர்த்தமுடையவை. ஓர் அமைச்சராக இருந்து கொண்டு, அரசின் ஊழல்களுக்கு வலிந்து முட்டுக் கொடுக்கும் போக்கைக் கைவிட்டு தன் கருத்தை வெளிப்படுத்தியமைக்காக அவரைப் பாராட்டத்தான் வேண்டும். வாசுதேவ நாணயக்கார, விமல்வீரவன்ச போன்றோரும்கூட அரசுக்கு எதிரான போக்கைத்தான் தற்போது கொண்டுள்ளனர். இவர்கள் தம் நிலைப்பாட்டை வெளிப்படுத்தக்கூடிய ஆகப்பெரும் வழிமுறை இந்த குடுமிபிடிச் சண்டைகளும் சப்பைக்கட்டு அறிக்கைகளும்தானா? என்பதையும் நாங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இவர்கள் அமைச்சர்கள். நீண்ட அரசியல் அனுபவம் உள்ளவர்கள். மக்கள் செல்வாக்கும் இவர்களுக்கு உண்டு. சுதந்திரக் கட்சிகூட தற்போது ஆளும் பெரமுனவுடன் முரண்பட்டுக் கொண்டிருக்கையில், எதிர்ப்புக் குரல்களை ஓரணியில் திரட்டி அரசை வீட்டுக்கு அனுப்புமளவுக்குக்கூட அரசுக்குப் பலமான அழுத்தத்தை இவர்களால் கொடுக்கமுடியும். ஆனால், அதைச் செய்வதற்கு இவர்கள் தயாரில்லை. இன்னமும் அதிகாரக் கதிரைகளை அலங்கரித்துக்கொண்டுதான் தம் கருத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றார்களே தவிர, மேற்குறிப்பிட்டளவு செயற்பாட்டு ரீதியான நகர்வுகளுடன் எதைச் செய்வதற்கும் இவர்கள் தயாரில்லை. இன்னும் சொல்லப் போனால் இதுகூட ஒருவகையான பேரம்பேசல்தான்.

அரசு ஆகப்பெரும் வங்குரோத்து நிலையில் உள்ளது. அனைத்துத் துறைகளிலும் பலவீனமான கொள்கைகளைக் கொண்டுள்ளது. தினசரி வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கு பொதுமக்கள் அன்றாடம் வதைபட்டுக் கொண்டிருக்கின்றனர். நாட்டின் சொத்துக்கள் அந்நிய தேசங்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நீண்டகாலப் பின்னடைவைச் சந்திப்பதற்கான அத்திபாரங்கள் போடப்பட்டுள்ளன. இவற்றுக்கு எதிராக நிலைப்பாட்டை நீங்கள் கொண்டுள்ளீர்கள் என்றால், இவற்றுக்கு நீங்கள் உடந்தையில்லை என்றால் இந்த அரசின் அதிகாரக் கதிரைகளை அலங்கரிக்காது உதறித் தள்ளுங்கள். அரசிலிருந்து வெளியேறி எதிர்ப்புக் குரலைப் பலப்படுத்துங்கள். அதைத்தான் மக்கள் எதிர்பார்க்கின்றார்களே தவிர ஆட்சியிலும் பங்கெடுப்போம், அதேநேரம் அரசையும் விமர்சிப்பதாகக் காட்டிக்கொள்வோம்' என்ற விலாங்குமீன் தனத்தை அல்ல. விலாங்குமீன்கள் எவராலும் விரும்பப்படுவதில்லை.




# இயற்கை பேரிடருக்கு மனிதர்களே காரணம்

## பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், நவ. 1**

**உலகம் கொரோனாத் தொற்றால் நெருக்கடிகளைச் சந்தித்துள்ள நிலையில், வீறு கொண்டெழும் காலநிலை மாற்றத்தாலும் நிலைகுலைந்துள்ளது. இதற்கு மனிதர்களின் செயற்பாடுகளும் ஒரு காரணம் .**

இவ்வாறு தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காட்டு விலங்குகளை அவற்றின் இயல்பான வாழிடங்களில் இருந்து அள்ளு கொள்ளையாகக் கடத்துவதன் மூலமும், கரிக்காற்றை உறிஞ்சுகின்ற காடுகளைக் கணக்கின்றிக் கபளீகரம் செய்வதன் மூலமும் பேரிடர் ஏற்பட்டுள்ளது. இதற்கு மனிதர்களாகிய நாமே காரணமாகியுள்ளோம்.

இப்போது சூழல் பாதுகாப்பினதும் மர நடுகையினதும் அவசியம் அதிகம் உணரப்பட்டுள்ளது. இறந்தவர்களின் நினைவாக மரங்களை நடுகை செய்து அவற்றை உயிருள்ள நினைவுச் சின்னங்களாகப் போற்றிய பண்பாட்டு மரபைக் கொண்டிருந்தவர்கள் தமிழர்கள். ஆனால், இன்று பேரினத்துவ அரசியலாலும், உலக மயமாக்கலாலும் இயற்கை வளங்களைக் காவு கொடுத்து நிற்கின்றனர். பொருத்தமான காலத்துக்காக நிலத்தின் கீழ் காத்துக் கிடக்கும் கார்த்திகை விதைகள் கார்த்திகை மாதத்தின் வரவோடு உறக்கம் கலைந்து புதுப்பலம் பெறுகின்றன. நாமும் இந்தக் கார்த்திகை மாதத்தில் காந்தளின் துளிர்ப்பைப்போல, எதிர்காலம் குறித்த நம்பிக்கையின் விதைப்பாக மரங்களை நாட்டுவோம்- என்றார். (ம-4)


# வன மூடுகையின்றி உள்ளன யாழ்ப்பாணமும், கொழும்பும்

## மரநடுகை மாதத்தில் திட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 1

இலங்கையிலுள்ள 25 மாவட்டங்களில் யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய மாவட்டங்களே வன மூடுகையின்றி, காடுகள் இன்றி காணப்படுகின்றன. எனவே, நவம்பர் மரநடுகை மாதத்தை முன்னிட்டு வன மூடுகை செயற்றிட்டம் இந்தமாதத்தில் நடைபெறவுள்ளது என்று யாழ். வனபரிபாலன திணைக்களத்தின் வனவிரிவாக்கல் உத்தியோகத்தர் ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

ஆகவே, வனமூடுகைகையை ஏற்படுத்தும் நோக்குடன் மரநடுகை மாதத்தை முன்னிட்டு வனபரிபாலன திணைக்களத்தால் இந்தமாதம் வன மூடுகை மாதமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் பல்வேறு இடங்களிலும் மரநடுகைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. அந்த வகையில் சண்டிலிப்பாய், சாவகச்சேரி, பருத்தித்துறை மூர்க்கம்




கடற்கரை, வியாபாரி மூலை, நாவாந்துறை ஆகிய பகுதிகளிலே வனபரிபாலன திணைக்களத்தில் மரநடுகை முன்னெடுக்கப்படவுள்ளது. வடக்கு மாகாணத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்ட ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் வேண்டுகோளுக்கிணங்க ஆளுநர் மாளிகையை சுற்றியுள்ள பகுதிகளிலும் மரநடுகை செயற்றிட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. - என்று அவர் தெரிவித்தார். (த-125)

நவம்பர் 2021

**வடமாகாண மரநடுகை மாதம்**



"மரங்களை நடுவதற்காக மிகச் சிறந்த காலம் 20 வருடங்களுக்கு முன்னர் இருந்தது. அடுத்த நல்ல நாள் இன்றாகும்.

–சீனப்பழமொழி

# பரிகாரிகண்டல் மண்ணகழ்வு ஆராய்வதற்காகத் தனிக்குழு!

**மன்னார், நவ.1**
**மன்னார் பரிகாரிகண்டல் பகுதியில் இடம்பெறுவதாகச் சொல்லப்படும் சட்ட விரோத மண்ணகழ்வு குறித்து ஆராய்வதற்கு, நான்கு திணைக்களங்களின் நிபுணத்துவம் கொண்ட குழுவின் அறிக்கையைச் சமர்ப்பிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.**

மன்னார்- நானாட்டான் பிரதேச சபைக்கு உட்பட்ட பரிகாரிகண்டல் கிராம அலுவலர் பிரிவில் மணல் அகழ்வால் சுற்றுச்சூழல் பாதிப்பு அடைகின்றது என்றும்- இதனால் பொதுத்தொல்லை ஏற்படுகின்றது என்றும்- தெரிவித்து நானாட்டான் பிரதேச சபையால் மன்னார் நீதிவான் நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.
இந்த வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.
பிரதிவாதிகள் சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் தலைமையில் சட்டத்தரணிகள் முன்லையாகி இருந்தனர். அத்துடன் வழக்காளியாக நானாட்டான் பிரதேச சபையின் தவிசாளர் பரஞ்சோதி மன்றில் முன்னிலையாகி இருந்தார். தம்மீதான குற்றச்சாட்டை பிரதிவாதிகள் ஏற்க மறுத்தனர். அத்துடன் சட்டத்துக்கு உட்பட்டு அனுமதி பெற்று, அந்த அனுமதியின் அடிப்படையில்தான் மணல் அகழ்வு இடம்பெறுகின்றது என்று பிரதிவாதிகள் குறிப்பிட்டனர். இதைத் தொடர்ந்து மணல் அகழ்வு சட்டத்துக்கு புறம்பாக இடம்பெறுகின்றதா? சூழலுக்கு பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றதா? என்பதை ஆராய்வதற்காக நிபுணர்கள் கொண்ட ஒரு குழுவினரை அமைப்பதற்காக நீதிபதி இரு தரப்பினரைக் கேட்டுக்கொண்டபோது இரு தரப்புச் சட்டத்தரணிகளும் இதை ஏற்றுக் கொண்டனர். இதற்கமைய நிபுணர்களை அடக்கிய குழு அமைக்கப்பட்டது. எதிர்வரும் 19ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படும் என்று தவணையிடப்பட்டுள்ளது. (ம-60)


100ஆவது பிறந்த தின நினைவு கூரல்

01.11.1921



01.11.2021

அமரர் சின்னத்துரை கனகம்மா
(சங்குவேலி வடக்கு, மானிப்பாய்)

பூமியில் பிறந்து நூறாண்டுகள்
பிரிந்து சென்று எட்டாண்டுகள்
இன்றும் எங்கள் நெஞ்சில்
நிறைந்துள்ளது உங்கள் நினைவு
உம்மால் பிறந்தோம்
உண்மையாய் வளர்த்தீர்
அளவில்லா அன்பினால்
அனுதினம் மகிழுந்தோம் தவறா உம்
- நெறியில்
நாம் தழைத்தோங்கி நிற்கிறோம்
உம் விழுமியங்களினால் நாம்
இன்று வியந்துபோய் நிற்கிறோம்
உம் அறிவுரைகள் எமக்கு ஊன்று
- கோலாயின அதனால் நாம்
இன்று இமயத்தில் நிற்கிறோம்
பிள்ளைகள் பத்து அத்தனைக்கும்
- துணைகள்
பேரன் பேர்த்தி இருபத்தேழு
பாரெங்கும் கிளைகள் பரப்பி
பூட்டப்பிள்ளைகள் முப்பதுடன்
பெரும் சந்ததியாய் உம் பரம்பல்
உம்கிளைகள் எங்கும் படரும்
உம் நினைவுகள் என்றும் தொடரும்
மம்மி!

என்றும் உங்கள் நினைவுடன்
பெருவிருட்சத்தின் கிளைகள்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
மற்றும் பூட்டப்பிள்ளைகள்

(CS 1103) (3.6)


# மரக்கடத்தலில் ஈடுபட்டவர் கைது

யாழ்ப்பாணம் நவ. 1
நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மரக்கடத்தலில் ஈடுபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டார்.
இது குறித்து மேலும் தெரியவருவதாவது:
நெல்லியடிப் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி இரவுவேளைகளில் வேப்பமரக் குற்றிகள் கடத்தப்படுகின்றன என நெல்லியடிப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே மேற்படி மரக்குற்றிகள் மீட்கப்பட்டன.
சந்தேகத்துக்கிடமாகப் பயணித்த பட்டா வாகனத்தை சோதனைக்கு உட்படுத்தியபோது அதில் வேப்பமரக் குற்றிகள் இருப்பது கண்டறிப்பட்டுள்ளது.
ஆவணங்களை பரிசீலித்தபோது அனுமதிப் பத்திரம் பெறப்படவில்லை. இந்த நிலையில் கடத்திச் செல்லப்படவிருந்த மரக்குற்றிகளும் அதற்குப் பயன்படுத்தப்பட்ட பட்டா ரக வாகனமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.
மரக்கடத்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சந்தேக நபரை கைதுசெய்து, அவருக்கு எதிராக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (ய-125)





## முல்லைத்தீவில்
# பட்டப்பகல் வேளையில் யானைகள் நடமாட்டம்!

முல்லைத்தீவு, நவ. 31
முல்லைத்தீவு மாவட்டத்தில் பகல் வேளைகளிலும் யானைகள் வீதிகளில் நடமாடுவதை காணக்கூடியதாக இருக்கின்றது.
ஒட்டுசுட்டான்- மாங்குளம் வீதியில் மாலை வேளைகளிலும் வீதியில் காட்டுயானைகள் நடமாடுகின்றன. வீதி ஓரமாகவே யானை நிற்பதும் வீதிக்கு வருவதும் வீதியால் செல்பவர்களை அச்சுறுத்துவதுமாகக் காணப்படுகின்றது எனத் தெரிவிக்கப் படுகின்றது. (ய-19)

# சேதனப்பசளை பகிர்ந்தளிப்பு

கொழும்பு,நவ.1
பெரும்போகச் செய்கைக்குத் தேவையான சேதனப் பசளையை பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டம் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று விவசாயத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஏ.எச்.எம்.எல். அபயரத்ன தெரிவித்துள்ளார்.
திரவ உரம் மற்றும் நனோ நைட்ரஜன் உரங்கள் சகல மாவட்டங்களுக்கும் இலவசமாக வழங்கப்படும்.
அதேவேளை அம்பாறை மாவட்ட விவசாயிகளுக்கு சேதனப்பசளை விநியோகிக்கும் வேலைத்திட்டம் கடந்த வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-4)

# சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் ஸ்தாபகருக்கு வவுனியாவில் கௌரவிப்பு

வவுனியா, நவ. 1
லண்டனில் இருந்து வருகை தந்த சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் ஸ்தாபகரை வவுனியா தமிழ் சங்கம் கௌரவித்துள்ளது. வவுனியா தமிழ்ச் சங்கத்தின் தலைவர் த.சிவகுமாரன் தலைமையில் வைரவப்புளியங்குளம், ஆதிவிநாயகர் பாலாம்பிகை மண்டபத்தில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.
சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் ஸ்தாபகர் சிவபாதம் கணேஸ்குமார் லண்டன் உள்ளிட்ட புலம்பெயர் தேசத்தில் சைவம், தமிழ் போன்றவற்றை வளர்ப்பதில் ஆற்றி வரும் பங்களிப்பைப் பாராட்டியும், இலங்கையில் அவரது சர்வதேச இந்து இளைஞர் பேரவையூடாக தமிழ், சைவப்பணி என்பவற்றுடன் கல்வி மற்றும் வாழ்வாதார உதவிகளையும் முன்னெடுத்து வருவதைப் பாராட்டியுமே மேற்படி கௌரவிப்பு முன்னெடுக்கப்பட்டது. (ம)




# 4 விபத்துக்களில் ஐவர் காயம்

கொழும்பு, நவ.1
தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில், பத்தேகொட பகுதியில் நான்கு வாகனங்கள் ஒன்றன்பின் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஐவர் காயமடைந்துள்ளனர் என அதிவேக நெடுஞ்சாலை பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# கடந்த ஆண்டில் மாத்திரம் 1 1/2 லட்சம் பேர் தற்கொலை

## தமிழகம் இரண்டாமிடம்



புதுடில்லி, நவ.1

**இந்தியாவில கடந்த ஆண்டில் தற்கொலைகளால் ஏற்பட்ட உயிரிழப்பு சம்பவங்கள் தொடர்பில் மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசிய குற்ற ஆவணப் பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.**


அதன்படி மகாராஷ்டிரா முதலிடத்திலும் தமிழகம் இரண்டாவது இடத்திலும் உள்ளன என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேலும் கடந்த ஆண்டு நாடு முழுவதும் 1 லட்சத்து 53 ஆயிரத்து 52 பேர் உயிரைமாய்த்துக் கொண்டுள்ளனர். சராசரியாக நாள் ஒன்றுக்கு 418 உயிர் மாய்ப்புக்கள் இடம்பெற்றுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.
நாட்டின் மக்கள் தொகையில் மகாராஷ்டிராவில் 13 சதவீதமும் தமிழகத்தில் 11 சதவீதமும் உத்தரபிரதேசத்தில் 3.1 சதவீதமுமாக உயிர்மாய்ப்புகள் பதிவாகியுள்ளன. கடந்த 2016 ஆம் ஆண்டில் 1.32 இலட்சம் பேரும் 2017ஆம் ஆண்டில் 1.29 லட்சம் பேரும், 2018 ஆம் ஆண்டில் 1.34 லட்சம் பேரும் 2019 ஆம் ஆண்டில் 1.39 லட்சம் பேரும் உயிரை மாய்த்துக்கொண்டுள்ள நிலையில், கடந்த 2020ஆம் ஆண்டில் ஒரு லட்சத்து 53 ஆயிரத்து 52 தற்கொலைகள் பதிவாகியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.
மேலும் கடந்த ஆண்டில் இந்தியாவில் நடந்த தற்கொலைகளில் 18 வயதுக்குக் கீழ் உள்ள ஆண்களில் 5 ஆயிரத்து 392 பேரும், பெண்களில் 6 ஆயிரத்து 4 பேரும் தற்கொலை செய்துள்ளனர் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# 300 பள்ளத்தில் வாகனம் கவிழ்ந்ததில் 13 பேர் சாவு


## உயிரிழந்தோருக்கு தலா ரூ.2 லட்சம் இழப்பீடு வழங்க பிரதமர் உத்தரவு

உத்தரகாண்ட், நவ.1
உத்தரகண்ட் மாநிலம், டேராடூன் அருகே உள்ள பகுதியில் 300 அடி பள்ளத்தில் வாகனம் ஒன்று கவிழுந்து விழுந்து விபத்துக்குள்ளானதில் 13 பேர் உயிரிழந்துள்ளனர்.
சம்பவ இடத்துக்கு விரைந்த மீட்புக் குழுவினர் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.
இதில் 13 பேர் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளதுடன் காயமடைந்த 4 பேர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
இந்த நிலையில் உயிரிழந்தோருக்கு இரங்கல் தெரிவித்த பிரதமர் நரேந்திர மோடி உயிரிழந்தோரின் குடும்பத்துக்கு தலா 2 லட்சம் ரூபாவும் காயமடைந்தோருக்கு தலா 50ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும் என அறிவித்துள்ளார். (ச)

# அரச மரியாதையுடன் புனித் உடல் அடக்கம்



கன்னட பிரபல நடிகர் புனித் ராஜ்குமாரின் உடல் நேற்று முழு அரசு மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.
அவரது மறைவுக்கு பிரதமர் மோடி உட்பட நாடு முழுவதும் உள்ள ஏராளமானோர் இரங்கல் தெரிவித்தனர்.
புனித் ராஜ்குமாரின் உடல் பெங்களூரில் உள்ள கண்டீரவா விளையாட்டுத் திடலில் வெள்ளிக்கிழமை மாலை முதல் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பின் அவரின் உடல் முழு அரசு மரியாதை யுடன் 21 குண்டுகள் முழங்க நல்லடக்கம் செய்யப்பட்டது. (ச-இ)



# 'ஏ.வை 4.2' வகை கொரோனா இந்தியாவில் 17 பேர் பாதிப்பு!

புதுடில்லி, நவ.1
உருமாறிய புதிய வகை ஏ.வை 4.2 வகை கொரோனா வைரஸால் இதுவரை இந்தியாவில் 17 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.
இந்தியாவின் ஆந்திராவில் 7 பேரும் கேரளாவில் 4 பேரும் தெலுங்கானா மற்றும் கர்நாடகாவில் தலா இருவர், மகாராஷ்டிரம் மற்றும் ஜம்மு - காஷ்மீரில் தலா ஒருவர் என 17 பேர் இனங்காணப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த உருமாறிய புதிய வகை ஏ.வை 4.2 வகை கொரோனா வைரஸ் தற்போது 42 நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளது உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. உருமாறிய புதிய வகை வைரஸ் பிரிட்டனிலேயே அதிகமாகப் பரவி வருகிறது. டெல்டா வகை கொரோனா வைரஸை விட இந்த 'ஏஒய் 4.2' வகை கடும் பாதிப்பைக் கொண்டது என்று கணிக்கப்பட்டுள்ளதுடன் எனவும் இந்த வைரஸ் குறித்து பிரிட்டனில் இது குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச)



# ஆசிரியர் வழங்கிய பகீர் தண்டனை!

உத்தரபிரதேசம், நவ.1
உத்தரபிரதேசம் மிர்சாபூரில் உள்ள பாடசாலை ஒன்றில் ஆசிரியர் ஒருவரால் மாணவனுக்குக் கடுமையான தண்டனை வழங்கப்பட்டுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.
மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட முரண்பாட்டில் மாணவன் ஒருவன் மற்றொரு மாணவனை கடித்துவிட அதற்கு மன்னிப்பு கோருமாறு ஆசிரியர் அதட்டியுள்ளார். ஆனால் குறித்த மாணவன் மன்னிப்புக் கேட்கவில்லை.
இதனால் ஆத்திரமடைந்த ஆசிரியர், மாணவனை பிடித்து, மேல் மாடிக்கு இழுத்துச் சென்று மாடியில் இருந்து கீழே போட்டுவிடுவதாக அவனது ஒரு காலைப் பிடித்து மாடியில் இருந்து தொங்க விட்டவாறு மிரட்டி உள்ளார். இது குறித்த புகைப் படம் சமூக வலைத்தளத்தில் பரவியதால் , குறித்த ஆசிரியர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** நன்மைகள் நடைபெறும் நாள். போட்டி, பொறாமை நீங்கும். எடுத்த விஷயத்தை எளிதில் முடித்து நிம்மதி காண்பீர்கள் . மற்றவர் பொறாமையால் ஏற்பட்ட பிரச்சினைகள் சுலபமாக தீரும்.

**இடபம்:** முயற்சியில் இனிய திருப்பம் உண்டாகி உங்களை மகிழ்விக்கும். வழக்கமான பணியில் திடீர் மாற்றத்தைச் செய்து வெல்வீர்கள். அலைச்சல் அதிகமாகும்.

**மிதுனம் :** முயற்சியில் நீங்கள் நினைத்ததைவிட தாமதமான பலன் கிடைக்கும். சிறப்புக் குணத்தால் பல விஷயங்களில் வெற்றி பெறுவீர்கள். எதிர்பாராத செலவு ஏற்படும்.

**கடகம்:** உங்களுக்கு பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். முன்பைவிட ஆரோக்கியம் சீராகும். நல்லவர் தொடர்பு நீடிக்கும். இழுபறியாக இருந்த விஷயம் சுமுகமாக முடியும்.

**சிம்மம்:** பணியில் ஏற்பட்ட தொய்வு அகலும். நட்பு வட்டம் விரியும். உணர்ச்சிகளையும், கோபத்தையும் கட்டுப்படுத்திக் கொள்வீர்கள். தொழிலில் நிலைமைகள் மேம்படும். இலாபம் கிடைக்கும். வீண் விவாதங்களில் ஈடு படவேண்டாம்.

**கன்னி:** கொடுத்த வாக்கை காப்பாற்றி நல்ல பெயரை எடுப்பீர்கள். மனதில் ஏதேனும் கவலை உண்டாகி அது இன்றே தீரும். உடற்சோர்வு வரலாம். வாகனம் தொடர்பான செலவுகள் குறையும்.

**துலாம்:** புதிய நபர்களின் அறிமுகம் கிடைத்து அவர்களால் நன்மையும் உண்டாகும். கலகலப்பான நிகழ்வுகளில் பங்கேற்று மகிழ்ச்சி அடைவீர்கள். கடந்த சில நாள்களாக இருந்து வந்த சிறு பிரச்சினைகள் நீங்கும்.

**விருச்சிகம்:** வியாபார விருத்திக்கு உங்கள் பேச்சு கைகொடுக்கும். பொழுதுபோக்கான விஷயங்களில் மனம் ஈடுபடும். முன்பு ஏற்பட்ட சிக்கல்களில் இருந்து இன்று விடுபடுவீர்கள். கூடுதல் கவனம் தேவை.

**தனுசு:** பணியிடத்தில் சலுகைகள் கிடைக்கும். பொருளாதார பிரச்சினை குறையும். தடைப்பட்டிருந்த பணிகளை இன்று நல்லபடியாக முடிப்பீர்கள். நண்பர்களின் ஒத்துழைப்பினால் ஆதாயம் உண்டு.

**மகரம்:** ரகசியத்தைப் பரப்பினால் பிரச்சினை உருவாகக்கூடும். கவனம் தேவை. உறவினர் பகை அகலும். உடன்பிறப்புகளின் ஆதரவு கிடைக்கும். மற்றவர்களுடைய மனம் நோகாதபடி கவனமாகப் பேசுங்கள்.

**கும்பம்** திட்டங்கள் வகுப்பதில் அலட்சியம் காட்டாதிருப்பது நல்லது. செலவுகளால் தடுமாற்றம் ஏற்படாமல் உறுதியாக இருங்கள். பயணங்களை முன்கூட்டியே சரியாகத் திட்டமிடுவது நல்லது.

**மீனம்** தன்னம்பிக்கை அதிகரிக்கும். வாய்க்கு ருசியான உணவு கிடைக்கும். பணியிடத்தில் தேவையற்ற பேச்சுகளை தவிர்க்க வேண்டும். உங்களின் அறிவுத்திறன் அதிகரிக்கும். நண்பர்களால் நன்மை ஏற்படும்.

## சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் குடியியல் நடவடிக்கைச் சட்டக்கோவையின் பிரிவு 16இன் கீழாக அறிவித்தல்

திருத்தப்பட்ட நம்பிக்கைப் பொறுப்புச் சட்டத்தின் பிரிவு 38(2) மற்றும் இதனுடன் சேர்த்து வாசிக்கப்படும் பிரிவு 101(2) இன் கீழாக சாவகச்சேரி, மட்டுவில் தெற்கு, கல்லுவம் அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலயத்திற்குச் சொந்தமான ஆதனங்களை குத்தகைக்கு கொடுப்பதற்கு அனுமதி கோரும் விண்ணப்பம்.

ஜெகநாதன் கைம்பெண் சோதிப்பிள்ளை
சாவகச்சேரி, மட்டுவில் தெற்கு, கல்லுவம் அருள்மிகு வீரகத்திவிநாயகர் ஆலய பரம்பரை தர்மகத்தா,
பருத்தித்துறை வீதி, புத்தூர் மேற்கு, புத்தூர்.

மனுதாரர்

**வழ.இல:நம்பிக்கைச்சொத்து /39/2021**

மேற்படி இலக்க வழக்கின் மனுதாரரால், சாவகச்சேரி, மட்டுவில் தெற்கு, கல்லுவம் அருள்மிகு வீரகத்திவிநாயகர் ஆலயத்திற்குச் சொந்தமான பின்வரும் ஆதன அட்டவணைகளில் நன்கு விபரிக்கப்படும் ஆதனங்களை குத்தகைக்கு கொடுப்பதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை பிரதான நிவாரணமாக கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே மனுதாரரின் மனுவில் மனுதாரரால் வேண்டப்பட்ட நிவாரணம் தொடர்பில் எவராயினும் ஏதேனும் ஆட்சேபனை தெரிவிக்க விரும்பின் 29.11.2021ஆம் திகதி காலை 9.00க்கு இம்மன்றின் திறந்த மன்றில் தோன்றி தெரிவிக்குமாறு குடியியல் நடவடிக்கை சட்டக்கோவையின் பிரிவு 16இன் கீழான அறிவித்தல் தரப்படுகின்றது.

2021 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 29 ஆம் திகதி

### ஆதன அட்டவணை - 1

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், தென்மராட்சிப்பகுதி, சாவகச்சேரிக் கோவிற்பற்று, தென்மராட்சி பிரதேச செயலகம், சாவகச்சேரி பிரதேச சபை, கிராம சேவகர் பிரிவு சந்திரபுரம் J/315, மட்டுவில் தெற்கு இறை:

"கட்டையடி வளவு" நிலப்பரப்பு நான்கும் குழி ஒன்பதும் (நில.பர. 4 குளி 9) கிணறும் அதற்குரியவைகளும். இதற்கெல்லை கிழக்கு: ஐயக்கோன் தவரஞ்சனுக்கும் மறுபேருக்குமுரியாதனம், வடக்கு: ஒழுங்கை, மேற்கு: சிவன் கோவில் வீதி, தெற்கு: வட்டன் செல்வராசாவின் ஆதனம். இதடங்கலும்.

### ஆதன அட்டவணை - 2

**மேற்படி மட்டுவில் தெற்கு இறை:**

"குண்டர் வளவு அல்லது ஆலடி வளவு" நிலப்பரப்பு அறுபத்தைந்தும் (நில.பர. 65) கிணறும் அதற்குரியவைகளும். இதற்கெல்லை கிழக்கு: சின்னத்தம்பி கெங்காதரனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், வடக்கு: விசுவலிங்கத்தின் ஆதனம், மேற்கு: றோட்டு, தெற்கு: ஒழுங்கையும், சின்னையாவின் ஆதனமும். இதடங்கலும்.

### ஆதன அட்டவணை - 3

**மேற்படி மட்டுவில் தெற்கு இறை:**

"கல்லு வயல்" நெற்பரப்பு நாற்பதும் (நெ.பர. 40) கிணறும் அதற்குரியவைகளும். இதற்கெல்லை கிழக்கு: சின்னத்துரை மகன் கேதீஸ்வரனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். வடக்கு: பாலசிங்கம் புஸ்பராணியின் ஆதனம். மேற்கு: பன்றித்தலச்சி கண்ணகையம்மன் கோயிலுக்குரிய ஆதனம். தெற்கு: பாலசுப்பிரமணியத்திற்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். இதடங்கலும்.

### ஆதன அட்டவணை - 4

**மேற்படி மட்டுவில் தெற்கு இறை:**

"உப்புருவில் வயல்" நெற்பரப்பு இருபத்தைந்தும் (நெ.பர. 25) கிணறும் அதற்குரியவைகளும். இதற்கெல்லை கிழக்கு: சிவன் கோயிலுக்குரிய ஆதனம், வடக்கு: தவயோகத்திற்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், மேற்கு: வீரகத்தி விநாயகர் ஆலயத்திற்குரிய ஆதனம், தெற்கு: சிதம்பரத்திற்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இதடங்கலும்.

### ஆதன அட்டவணை - 5

**மேற்படி மட்டுவில் தெற்கு இறை:**

"உப்புருவில் வயல்" நெற்பரப்பு பத்தும் (நெ.பர. 10) அதற்குரியவைகளும். இதற்கெல்லை கிழக்கு: வீரகத்திபிள்ளையார் ஆலயத்திற்குரிய ஆதனம், வடக்கு: தேவிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், மேற்கு: பாலசுப்பிரமணியத்திற்குரிய ஆதனம், தெற்கு: நீலகண்டர் மனோகரனுக்குரிய ஆதனம். இதடங்கலும்.

### ஆதன அட்டவணை - 6

**மேற்படி மட்டுவில் தெற்கு இறை:**

"வாணிவன்புலம் அல்லது கோப்பாய்ராலி" நெற்பரப்பு பத்தும் (நெ.பர. 10) கிணறும் அதற்குரியவைகளும். இதற்கெல்லை கிழக்கு: வெள்ளவாய்க்கால். வடக்கு: சின்னத்தம்பி கெங்காதரனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கு: தம்பு தவக்குமாருக்குரிய ஆதனம். தெற்கு ஐயாத்துரை சரவணபவானுக் குரிய ஆதனம். இதடங்கலும்.

### ஆதன அட்டவணை - 7

**மேற்படி மட்டுவில் தெற்கு இறை:**

'கோப்பாய் அராலித்தோட்டம்' நிலப்பரப்பு பன்னிரண்டும் (நில.பர. 12) கிணறும் அதற்குரியவைகளும். இதற்கெல்லை கிழக்கு: சரவணசிவகுருவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், வடக்கு: அருணாச்சலம் இராமலிங்கத்திற்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், மேற்கு: செல்லன் ரங்கநாதாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், தெற்கு: அரியகுட்டி கிருஸ்ணப்பிள்ளைக்குரிய ஆதனம். இதடங்கலும்.

### ஆதன அட்டவணை - 8

**மேற்படி மட்டுவில் தெற்கு இறை:**

"காட்டிப்புலமும் தோட்டமும்" நிலப்பரப்பு பன்னிரண்டும் (நில.பர. 12) கிணறும் அதற்குரியவைகளும். இதற்கெல்லை கிழக்கு: இராசையா தம்பிரத்தினத்திற்குரிய ஆதனம், வடக்கு: சரவணமுத்து சந்திரனுக்குரிய ஆதனம், மேற்கு: ஒழுங்கை, தெற்கு: செல்லக்குட்டிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இதடங்கலும்.

### ஆதன அட்டவணை - 9

**மட்டுவில் மத்தி இறை:**

"வராலி வளவு" நிலப்பரப்பு பத்தும் (நில.பர. 10) அதற்குரியவைகளும். இதற்கெல்லை கிழக்கு: வயி ரமுத்து சந்திரனுக்குரிய ஆதனம், வடக்கு: பேரம்பலம் சின்னத்தம்பிக்குரிய ஆதனம், மேற்கு: றோட்டு, தெற்கு: தம்பிதுரை சந்திரதாஸ்வுக்குரிய ஆதனம். இதடங்கலும்.

இவ்வாதனங்கள் பிரசித்த நொத்தாரிஸ் சண்முகலிங்கம் சிவரூபன் முன்பாக 24.5.2009ம் திகதி நிறைவேற்றப்பட்ட ஒப்படைத்தல் உறுதி இல: 1587 மூலம் குறித்த சாவகச்சேரி, மட்டுவில் தெற்கு, கல்லுவம் அருள்மிகு வீரகத்திவிநாயகர் ஆலயத்திற்குச் சொந்தமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**வரைவு**
**மனுதாரர் சட்டத்தரணி**

**மன்றின் கட்டளைப்படி**
**பதிவாளர்,**
**மாவட்ட நீதிமன்றம்**
**சாவகச்சேரி.**

## மரண அறிவித்தல்

மலர்வு
24 . 04 . 1935



உதிர்வு
29 . 10 . 2021

### ஆறுமுகம் சிவராசா

யாழ் நவாலி வடக்கை பிறப்பிடமாகவும் நீர்வேலியை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சிவராசா அவர்கள் கடந்த (29.10.2021) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் ஆறுமுகம் (நவாலி வடக்கு) சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரி அவர்களின் அன்பு கணவரும், வசுமதி (பிரான்ஸ்), வளர்மதி (ஜேர்மனி), சிவானந்தன் (பிரான்ஸ்), விஜியானந்தன் (சுவிஸ்), வான்மதி (பிரான்ஸ்), சசியானந்தன் (பிரான்ஸ்), பிரேமானாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், முத்துக்குமார், சின்னத்தங்கை, கோவிந்தராசா, மகேஸ்வரி, சின்னம்மா, இரத்தினம் ஆகியோரின் அன்பு சகோதரரும், காலஞ்சென்ற கோபாலசிங்கம், கமலாம்பிகை, காலஞ்சென்ற புவனேஸ்வரன் மற்றும் பேரின்பநாதன், செல்வராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், விஜயசந்திரன் (பிரான்ஸ்), சிவராசா (ஜேர்மன்), கௌரி (பிரான்ஸ்), சியாமளா (சுவிஸ்), சிவகுமார் (பிரான்ஸ்), அகிலா (பிரான்ஸ்), சங்கீதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும். பேரப்பிள்ளைகளின் அன்புப் பேரனும், பூட்டப்பிள்ளைகளின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பிற்கு: சிவா-+33695354142
சுமதி-+33627017567
பத்மினி-+4915781933362

தகவல்:
குடும்பத்தினர்

(CR 5500) 01/06

### தூரப் பிரதேசங்களுக்கு நவம்பர் 5இல் ரயில் சேவை

கொழும்பு,நவ.1

தூரப் பிரதேசங்களுக்கான ரயில் சேவைகள் எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்படும் என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார். அதேவேளை, அலுவலக ரயில் சேவைகளும், மாகாணங்களுக்கு இடையிலான பஸ் சேவைகளும் இன்று முதல் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

## மரண அறிவித்தல்



### இசைவித்தகி திருமதி சிவசக்தி சிவநேசன்

(விரிவுரையாளர், பாரதிய வித்தியா பவன்-இலண்டன்)

31.10.2021 காலை லண்டனில் காலமானார். இவர் அமரர் சிவப்பிரகாசபிள்ளை அங்கயற்கன்னி ஆசிரியர் தம்பதிகளின் மூத்த தலைமகள் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி பின்னர் அறியத் தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள். அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு**

| | |
|---|---|
| K. சிவநேசன் (கணவர் - லண்டன்) | - 0044 207 386 0924 |
| S. சிவநாதன் (சகோதரன் - கனடா) | - 001 416 558 9512 |
| S. சிவநேசன் (சகோதரன் - கனடா) | - 001 514 984 6853 |
| S. சிவசங்கர் (சகோதரன் - லண்டன்) | - 004 479 5638 8523 |
| S. சிவகரன் (சகோதரன் - அவுஸ்ரேலியா) | - 006 141 133 2382 |
| திருமதி P.சிவகலை (சகோதரி - கொழும்பு) | - 077 260 5571 |
| திருமதி S. சிவகெங்கா (சகோதரி - அவுஸ்ரேலியா) | - 006 142 190 3357 |

(CS 40855) (3.6)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
10 . 12 . 1942



மறைவு
02 . 10 . 2021

### அமரர் திருமதி கனகசபை புஸ்பலீலா

கடந்த (02.10.2021) சனிக்கிழமை சிவபதமடைந்த எமது அன்பு தாய் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு பல்வேறு வழிகளில் உதவியும் ஆறுதல் அளித்தவர்களுக்கும், தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டவர்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டி நிகழ்வானது இன்று (01.11.2021) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. இக்கிரியைகளிலும் மதிய போசனவிருந்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

குடும்பத்தினர்.
077 1515 491, 077 639 0501

(CR 35810) 1-6

# தட்டித் தூக்கியது நியூஸிலாந்து தொடர் தோல்வியில் இந்தியா!





டுபாய், நவ.1

**ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற 28 ஆவது லீக் ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி 8 விக்கெட்டுக்களால் இந்திய அணியை இலகுவாக வீழ்த்தியது.**

இந்திய அணி ஏற்கனவே பாகிஸ்தான் அணியுடனான ஆட்டத்திலும் தோல்விய டைந்துள்ள நிலையில், தொடரின் அரையிறு திக்குச் செல்லும் வாய்ப்பு சிக்கலாகியுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸி லாந்து அணி முதலில் களத் தடுப்பைத் தெரிவு செய்தது. துடுப்பெடுத்தாடக் கள மிறங்கிய இந்திய அணி நியூஸிலாந்தின் பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாது தடுமா றியது. இந்திய அணியின் இலக்குகள் அடுத் தடுத்து வீழ்த்தப்பட 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் இந்திய அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 110 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.



இந்திய அணி சார்பாக அதிகூடிய ஓட்டங்களாக ரவீந்திர ஜடேஜா 26 ஓட்டங்களைப் பெற்றார். ஏனையோர் சோபிக்கவில்லை.

நியூஸிலாந்து அணியின் பந்துவீச்சில் ட்ரெண்ட் போல்ட் 3 விக்கெட்டுகளையும், இஷ் சோதி 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

இலகுவான இலக்கை நோக்கித் துடுப்பெடுத் தாட ஆரம்பித்த நியூஸிலாந்து அணி 14.3 பந்துப்பரிமாற்றங்களில் வெற்றி இலக்கை அடைந்தது. நியூஸிலாந்தின் ஆரம்ப வீரர்கள் மார்டின் குப்தில் டெரில் மிட்செல் இணை அதி ரடியாக விளையாடியது. குப்தில் 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அதன்பின்ஜோடி சேர்ந்த டெரில் மிட்செலும், கேன் வில்லியம்சனும் நிதான ஆட்டத்தை வெளிப்படுத் தினர். டெரில் மிட்செல் இடையிடையே பவுண்டரி களை விளாசினார். ஆனால் டெரில் மிட்செல் 49 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து அரைச்சதம் அடிக்கும் வாய்ப்பை தவறவிட்டார். மறுமுனையில் சிறப்பாக விளையாடி வந்த கேன் வில்லியம்சன் அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார்.

இதன் மூலம் நியூஸிலாந்து அணி 14.3 பந்துப்பரி மாற்றங்களில் இலக்கை எட்டி, 8 இலக்குகள் வித்தி யாசத்தில் இந்திய அணியை வீழ்த்தியது. இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்த கேன் வில்லியம்சன் 33 ஓட்டங்களைப் பெற்றார்.

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 13 . 09 . 1941 | 31 . 10 . 2021 |



### பரமலிங்கம் சறோஜினிதேவி

கலட்டி லேன் கோண்டாவில் மேற்கு கோண்டாவிலை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பரமலிங்கம் சறோஜினிதேவி நேற்று (31.10.2021) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பரமலிங்கத்தின் பாசமிகு மனைவியும், பரணீதன், டிபநீதன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுஜஜனி, காயத்திரி, சுரேந்தன், ஜனனி, முரளிதரன், தக்ஷாயினி ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்ற பஞ்சநாதன் மற்றும் சிவசுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ஆருசன், வர்ஷன், கபிஷன், பவிஷ்னா, நிருத்பவன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2021) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தல்ல உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்.**

**தகவல்:**
**S.சுரேந்தன் (மருமகன்)**

(CS 17909) 1-6

## மரண அறிவித்தல்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 16 . 02 . 1956 | 31 . 10 . 2021 |



### பாலசுந்தரம் கிருஷ்ணமூர்த்தி
(A.P.C சாரதி)

மீசாலையைப் பிறப்பிடமாகவும் வீரசிங்கம் வீதி, மீசாலை வடக்கு (புத்தூர் சந்தி) வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுந்தரம் கிருஷ்ண மூர்த்தி (A.P.C சாரதி) நேற்று (31.10.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் பாலசுந்தரம் சரஸ்வதி தம்பதியரின் மகனும், மகேஸ்வரியின் (கனடா) அன்புக் கணவரும், குஜிந்தர், யதீசன் (கனடா) அவர்களின் அன்புத் தந்தையும், சஜீபா (கனடா), குகதீபா (புளியம்பொக்கணை) அவர்களின் அன்பு மாமனாரும், அஸ்வினி (புளிம்பொக்கணை), யாழினா, ஆரன், ஆருகன் (கனடா) அவர்களின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2021) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**குஜிந்தர் - 4169539192**
**மகேஸ்வரி - 077 524 2420**
**யதீசன் - 6477203500**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CR 35811) 1-6

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
# வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவுசெய்தல் - 2022

கீழே குறிப்பிட்டுள்ள வழங்கல்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு யாழ் பல்கலைக்கழகத்துடன் தம்மை பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள் / உற்பத்தியாளர்கள்/ஒப்பந்தகாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் **2021 டிசம்பர் 04ஆம் திகதிவரை** ஏற்றுக்கொள்ளப்படும்.

**1. பாவனைபொருட்கள் காகிதாதிகள்**

1.1 எழுதுபொருட்கள் காகிதாதிகள்.(Toner, Cartridge ,Printer Rib bon,Printer paper, etc…)
1.2 வெட்டும் கருவிகள் மட்பாண்டங்கள் உட்பட சமையலறைப் பாத்திரங்கள்.
1.3 சுகாதாரசேவைவழங்கல்:- தும்புதடி, விளக்குமாறு, கால்துடைப்பங்கள், ஹார்ப்பிக், விம், சுத்திகரிப்பு மற்றும் மெதுகூட்டல் பொருட்கள் முதலியன.
1.4 மழைக்கோட்டுக்கள், சேற்றுசப்பாத்துக்கள், குடைகள், சப்பாத்துக்கள் முதலியன.

**2. புத்தகம், புத்தகம் கட்டுதல்இஅச்சிடுதல்.**

2.1 அச்சிடுதல், புளொக்செய்தல், ரப்பர் முத்திரைகள், திகதிமுத்திரைகள்.
2.2 புத்தகங்கள், பருவவெளியீடுகள் ஏனைய வெளியீடுகள்.
2.3 புத்தகங்களையும், பருவவெளியீடுகளையும் கோர்த்தல்.

**3. தளபாடங்கள் அலுவலக இயந்திரங்கள்**

3.1 அலுவலகதளபாடம் - மரம் உருக்கு–கணினிமேசை, கதிரைகள்.
3.2 அலுவலக உபகரணங்கள் (இயந்திரங்கள், கல்குலேட்டர்கள், பிரதிபண்ணும் இயந்திரங்கள், நிழற் பிரதி இயந்திரங்கள, தொலைநகல் கருவிகள் முதலியன).
3.3 தீயணைப்புசாதனங்களும், பாதுகாப்பு சாதனங்களும்.

**4. கட்டிட பொருட்கள்/ பராமரிப்பு பொருட்கள் மற்றும் கருவிகள்**

4.1 சகலவகையான கட்டட நிர்மாண பொருட்கள்.
- a. பெயின்டுகள் வாணிஸ், தொடர்பான பொருட்கள்.
- b. கட்டிட நிர்மாண தேவைகளுக்கான அனைத்துவிதமான பொருட்களும். (மணல், கிரவல், மற்றும் கல் தொடர்பானவை)
- c. இயந்திர கருவிகளும் உதிரிப்பாகங்களும்.
- d. பைப்புகள், பைப் இணைப்புகள்.
- e. மரங்கள் - தீராந்தி, பனைமரம், சலாகைகள்.
- f. பிளாஸ்ரிக், பைபர் கிளாஸ் உற்பத்திகள்.
- g. அலுமினியம் பொருத்துகள், மட்பாண்டப் பொருட்கள் கண்ணாடிப் பொருட்கள், கண்ணாடிகள்.
- h. குளியலறை பொருத்துகள், சுவர், தரைமாபிள்கள்.
- i. ஈரத் தடைப்பொருட்கள்.
- j. கழிவுநீர் சீராக்கி தொகுதி பராமரிப்புக்கான பொருட்கள்.
- k. குடிநீர் சீராக்கி தொகுதி பராமரிப்புக்கான பொருட்கள்.

**5. மின்னியல் பொருட்கள்**

மின்சாரசாதன உபகரணங்களும் மற்றும் உதிரிபாகங்களும்.

**6. ஆய்வு கூட பொருட்கள் / சாதனங்கள்.**

6.1 ஆய்வு கூடச் சாதனங்கள்
6.2 ஆய்வு கூட இரசயனபொருட்களும் கண்ணாடிச் சாதனங்களும்.

**7. வாகனபராமரிப்பு**

7.1 டயர் ரியுப்புகள், பற்றரிகள்.
7.2 மோட்டார் உதிரிப்பாகங்கள், துணை உறுப்புகள்.
7.3 மோட்டார் வாகனம் திருத்துதல்
7.4 மோட்டார் வாகன உள்ளக வேலைகள்.

**8. பொதுசேவைகள் வழங்கல்கள்**

8.1 ஆயுர்வேத மருந்துகள் உட்பட மருந்துகளும், மருத்துவவழங்கல்களும்
8.2 விளையாட்டு மற்றும் நலன்புரிபொருட்கள்.
8.3 புடவைகள், ஜவுளிகள், ஜன்னல் திரைச்சீலைகள், சீருடைத்துணிகள்.
8.4 தோட்டவேலைகளுக்கான பசளைகள், இரசாயனங்கள் கருவிகள், இயற்கை உரம், பூங்கன்றுகள் மற்றும் செடிகள்.
8.5 அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் - தட்டச்சு இயந்திரங்கள, புகைப்பட பிரதிபண்ணும் இயந்திரங்கள், தொலைநகல், கணினி, தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள், மின் தட்டச்சு இயந்திரங்கள் போன்றவற்றின் திருத்தவேலைகள்.
8.6 உருக்கு, மரத் தளபாட திருத்த வேலைகளும் மெருகூட்டல் வேலைகளும்.
8.7 கதிரைகள் பின்னுதல்.
8.8 உடைகள் கதவு ஜன்னல் திரைச்சீலைகள் தைத்தல்.
8.9 உடைகளைச் சலவைசெய்தல்.
8.10 சுத்திகரிப்பு சேவை வழங்கல்.
8.11 பாதுகாப்பு சேவை வழங்கல்.
8.12 பொதிகள் பரிமாற்று / சுங்க தீர்வைகள் சேவை.
8.13 நிகழ்வுகள் நிர்வகிப்பு சேவை.
8.14 உணவு வழங்கல் சேவை.
8.15 வீடியோ மற்றும் புகைப்பட சேவை.
8.16 வாடகை அடிப்படையில் ஒலி மற்றும் ஒளி உபகரணங்கள் வழங்கல்.
8.17 பயண முகவர் சேவை.
8.18 மோட்டார் வாகனங்கள் வாடகைக்கு வழங்குதல் (Passenger van-with A/C & without A/C, passenger bus, lorry, tractorswith trailer, etc.
8.19 இயந்திரங்கள் வாடகைக்கு வழங்குதல். (JCB, excavator, com pressor, pay loader, etc.)
8.20 தற்காப்பு உபகரணங்கள்
8.21 தீயணைப்பு கருவிகள்

**9. எந்திரவியல் சேவைகள்.**

9.1 பெயர்ப்பலகைகள் வரைதலும் பிளாஸ்ரிக் பெயர்ப் பலகைகள் செய்தலும்.
9.2 மின்மோட்டார், நீரிறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள், திருத்துதல் மற்றும் மீளமுறுக்குதல் (Rewind) உட்பட
9.3 ஜெனரேட்டர்கள் திருத்துதல்.
9.4 குளிரூட்டி, வாகன குளிரூட்டி திருத்துதல்.
9.5 குடிசார் எந்திரவியல் வேலைகள், கட்டடங்கள், வீதிகள், ஏனைய நிர்மாணங்கள் நிர்மாணித்தலும் திருத்தவேலைகளும்.
9.6 மின்சார இணைப்புவேலைகள்.
9.7 நீர் விநியோக வடிகாலமைப்பு வேலைகள் மற்றும் திருத்தவேலைகள்.
9.8 இரும்பு, அலுமினியம் என்பவற்றிலான கட்டடம் சார்ந்தபொருத்துக்கள் செய்தலும் பொருத்தலும்.
9.9 கட்டிடங்கள் / கட்டடசேவைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய (இயந்திரசாதனங்களுக்கான) உசாத்துணைசேவைகள்.
9.10 மின்சார உசாத்துணை சேவைகள்.
9.11 நிலையாக பொருத்தப்பட்ட மரத்தளபாடங்கள் வழங்கல் / பொருத்துதல் /தச்சுவேலை.
9.12 ஏந்திரவியல்சார் வரைதலும் நீலப் பிரதிசெய்தலும்.
9.13 கறையான் / பீடைகள் ஒழிப்புவேலைகள்.
9.14 தொழிலாளர் வழங்கல் (திறன் சார், திறன் சாரா மற்றும் காவலாளிகள்)
9.15 பராமரிப்பு வேலைக்கான கணிய அளவுச் சிட்டை (B.O.Q) தயாரித்தல்

**10. மின்னணு பொருட்கள்.**

10.1 கணினி மற்றும் கணினி உபகரணங்கள் உட்பட மின்னியல் பொருட்கள்.
10.2 தகவல்தொழில்நுட்ப வன்பொருள் மென்பொருட்களிற்கான வழங்கலும், சேவைகளும் பராமரிப்புகளும்.
10.3 தொடர்பாடல் சாதனங்களுக்கானஉபகரணங்கள் வழங்கலும், சேவைகளும் பராமரிப்புகளும்.
10.4 தொலைபேசி உபகரணங்களும் கையடக்க தொலைபேசிகளும் வழங்கல்.
10.5 கணினி வலைப்பின்னல் ஸ்தாபித்தலும் அதற்கான உபகரணங்களும்.

## பதிவு தொடர்பான நிபந்தனைகள்

01. வழங்குநர்களாக பதிவு செய்பவர்கள் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரிவிண்ணப்பப் படிவத்தை பூர்த்திசெய்தல் வேண்டும். ஒவ்வொரு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"வழங்கல்கள் சேவைகளுக்கான பதிவுசெய்தல் 2022"** எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

❖ பதிவுகளுக்கான விண்ணப்பங்கள் மற்றும் வைப்பு சிட்டை பிரதி என்பவற்றினை **நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்** என முகவரியிடல் வேண்டும்.

02. ஒவ்வொரு வழங்கல் / சேவைகளிற்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டும். ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்துடனும் பதிவுக்கட்டணமாக ரூபா 2,000/= இனை கணக்கு இல. 162-1-001-6-0000880 மக்கள் வங்கி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம். எனும் பெயரில் வைப்பிலிட்டு வைப்பு சீட்டின் பிரதியை இணைக்கவும்.

03. கம்பனி தவிர்ந்த ஏனைய நிறுவனங்கள் தங்கள் வியாபார பதிவுபத்திரத்தில் குறிப்பிட்ட வியாபாரத்தின் பொது தன்மைக்கு ஏற்ற வழங்கல் / சேவைக்கு மட்டுமே பதிவினை மேற்கொள்ள முடியும். வியாபாரத்தின் பொது தன்மையுடன் தொடர்பற்ற வழங்கல் / சேவைக்கு பதிவினை மேற்கொள்ளும் விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும்.

04. விலைமனுக்கள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே கோரப்படும். ஆயினும் வேறிடங்களிலிருந்து விலைமனுக்கள் கோர பல்கலைக்கழகத்திற்கு உரிமை உண்டு.

05. கோரப்படும்போது விலைமனுக்களை சமர்ப்பிக்கதவறும் அல்லது உரியநேரத்திற்கு பொருட்கள் / சேவைகளை வழங்க தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராதபொருட்கள் / சேவைகளைவழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தலின்றி பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

06. விண்ணப்பதாரரின் ஸ்தாபனத்தில் நிரந்தரமாக வேலை செய்யும் சகல எந்திரவியலாளர், கட்டடக்கலைஞர் ஆகியோரின் பெயர் அனுபவங்களையும் CIDA பதிவு இலக்கம் மற்றும் தரம் ஆகியவற்றையும் குறிப்பிடுக. (எந்திரவியல் சேவைகள் இலக்கம் 9.5, 9.6, 9.7, 9.8, 9.9, 9.10 மற்றும் 9.16 இற்குமட்டும்)

07. சேவைகளை/ வழங்கல்களுக்கான கொடுப்பனவுகள் விண்ணப்பத்தில் பதிவுசெய்யும் பெயரிலேயே வழங்கப்படும். அத்துடன் வழங்குநர்கள் தங்கள் வியாபார பெயரிலேயே வங்கி கணக்கினை வைத்திருக்க வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு உதவி நிதியாளர் (வழங்கல்) உடன் தொடர்புகொள்ளவும். தொ.பே.இல. 0212226519.**

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.**

---

**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.**

**வழங்குனர்கள் மற்றும் சேவையாளர்களை பதிவுசெய்தல் - 2022**

**01. தனிப்பட்டதகவல்கள்**

1.1 முழுப்பெயா:…………………………………………
1.2 தே.அ.அ. இல …………………………………………
(தேசியஅடையாளஅட்டையில் உள்ளபடி)
1.3 விலாசம்:…………………………………………
…………………………………………
1.4 நிரந்தரதொலைபேசி இல:………………கைத் தொலைபேசி இல:………………
தொலைநகல்:…………………………………………

**02. வியாபாரதகவல்கள்**

2.1 முயற்சியாண்மை நிறுவனத்தின் பெயர்:…………………………………………
2.2 வியாபார பதிவு இல:…………………………………………
(வியாபார பதிவு சான்றிதழ் பிரதியை இணைக்கவும்)
2.3 பெறுமதிசேர் வரி (VAT) இல:…………………………………………
(VAT இல காணப்படின், பெறுமதிசேர் வரி (VAT) பதிவு சான்றிதழ் பிரதியை இணைக்கவும்.CIDA பதிவு இலக்கம்………… தரம்……………… காலாவதி இல: ………………
2.4 விலாசம்:…………………………………………
…………………………………………
2.5 நிரந்தர தொலைபேசி இல:………………கைத்தொலைபேசி இல:………………
தொலைநகல் :………………………………
(குறைந்த பட்சம் இரண்டு தொலைபேசி இலக்கங்களை குறிப்பிடவும்)
2.6 மின்னஞ்சல் முகவரி:…………………………………………
2.7 மாவட்டம்:…………………………………………
2.8 பிரதேசசெயலர் பிரிவு:…………………………………………

**03. மேலதிகவிபரங்கள்**

3.1 வங்கியாளரின் பெயர் :…………………………………………
3.2 கிடைக்கக்கூடிய கடன் வசதிகள் :…………………………………………
3.3 ICTAD பதிவு இல:…………………………………………
(எந்திரவியல் சேவை 9.5 9.9 இற்குமட்டும்.) ICTADபதிவு இல்லாதுவிடின் ரூபா 200,000.00 (இருநூறு ஆயிரம் மட்டும்) க்கு உட்பட்ட வேலைகளுக்கு கூறுவிலை சமர்ப்பிக்கமட்டுமே தகுதியுடையவராவார்.

**04. வழங்கல் சேவைகளுக்கானவிபரங்கள்.**

| தொடர் இல | சேவைகள் /வழங்கல்கள் |
|---|---|
| | |
| | |
| | |

**05. வழங்கப்படும் பொருட்கள் பல்கலைக்கழகத்தில் ஒப்படைக்கவேண்டும்**

நான்/ நாங்கள் மேற்படி பதிவு நிபந்தனைகளுக்கு இணங்குகின்றேன்/ இணங்குகின்றோம்.

**கையொப்பம் :………………………………**

**பெயர் :………………………………** **திகதி:………………………………**

(CR. 35494) (2.6)

# அரச வங்கி உட்பட12 துறைகள் அத்தியாவசிய சேவைகளாகின

கொழும்பு, நவ.1
நாட்டில் அரச வங்கி உட்பட 12 துறைகளை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தி வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி கனிய எண்ணெய், துறைமுகம், தொடருந்து அஞ்சல் மற்றும் வங்கி முதலான சேவைகள் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதியால் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டுள்ளது. இதேவேளை வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக ஜீவன் தியாகராஜா நியமிக்கப்பட்டமை தொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலும் ஜனாதிபதியால் வெளியிடப்பட்டுள்ளது. (ச-இ)

**Personal Class**

தரம் - 03 முதல் O/L வரையான மாணவர்களுக்கு அனைத்து பாடங்களும் & A/L மாணவர்களுக்கு பௌதீகவியல், இரசாயனவியல், பொருளியல், வணிகக்கல்வி உட்பட அனைத்து பாடங்களும் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.

077 074 5975 (CS 40856)(2.6)

# யாசகர்களை தேடிப்பிடித்து கொரோனாத் தடுப்பூசி

கொழும்பு, நவ. 1
மேல் மாகாணத்தில் யாசகத்தில் ஈடுபடுபவர்களைப் பரிசோதித்து, அவர்களுக்குக் கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய, நேற்றுமுன்தினம் 541 யாசகர்கள் பரிசோதிக்கப்பட்டனர். அவர்களில் தடுப்பூசி செலுத்திக் கொள்ளாத 77 யாசகர்கள் அடையாளம் காணப்பட்டனர். அவர்களில் 22 பேருக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டது. ஏனைய 55 பேருக்கும் விரைவில் தடுப்பூசி செலுத்தப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-4)

**பணிப்பெண்கள் தேவை**

யாழ். நகரில் இயங்கும் பான்சி. கிப்ட் (gift) விற்பனை நிலையத்திற்கு அனுபவமுள்ள மற்றும் பழக விரும்பு பெண் விற்பனையாளர்கள் தேவை. 077 210 5286

(CS 17901) (3.6)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**




பொற்பதி புகழ் மைந்தன்
பேராசிரியர் சிற்றம்பலம்
Dr.ராஜேந்திரா

வையகம் போற்றும் வைத்தியராய் மிளிர்ந்து
யாழ் போதனா வைத்தியசாலையின்
சத்திர சிகிச்சை நிபுணராய் சரித்திரம் படைத்து
இன்றோ.... யாழ். பல்கலைக்கழகத்தில்
பேரொடு புகழ் சேர்ந்த பேராசிரியராய்
பெரும் பேறான உயர்வு பெற்ற பேரொளியே!
சிறப்பான சிற்றம்பலம் தம்பதிகள் பெற்றெடுத்த
ராஜ கிரிடமே ராஜேந்திரா ஐயனே!
நீண்டபுகழ் தொடர நீடூழி வாழ
பொற்பதி விநாயகன் அருள்வேண்டி
வாழ்த்துக்கூறும்

Congratulations!

பொற்பதி வீதி,
கொக்குவில்.

சு.விஜயகுமார் குடும்பம்
(பிரதேசசபை உறுப்பினர்- நல்லூர்)

(CS 40851) (2.6)

**16ஆம் நாள் நினைவஞ்சலி**



பிறப்பு 15 . 12 . 1939

இறப்பு 18 . 10 . 2021

கடந்த 18.10.2021 இறைபதமடைந்த எமது
குடும்பத் தலைவி

**அமரர் திருமதி பூபாலசிங்கம் சுகிர்தலட்சுமி**
**(சுகிர்தம்)**

பண்பின் உறைவிடமாய். அன்பின் திருவுருமாய்
எம்மோடு உடன் இருந்தீர்
கனிவான பேச்சும் கனிதரும் செயலும்
எம் நினைவுகளில் நீள்கின்றன.
வாழ்வின் பொருளுணர்ந்து
வாழ்வாங்கு வாழ்ந்து இறைவனடி சேர்ந்தீர்
உம்மை உளமாரப் பணிகின்றோம்.

அன்னாரின் 16ஆம் நாள் நினைவு தினம் நாளை (02.11.2021) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

(CS 40852) (3.6)

உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்

**வடமாகாண மரநடுகை மாதம்**

**கார்த்திகை 01 - 30, 2021**

கொரோனா கற்றுத்தந்த பாடம்

**'இயற்கையை நாம் அழித்தால்
இயற்கையால் நாம் அழிவோம்'**




**ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்**

கார்த்திகை மாதத்தில் காந்தளின் துளிர்ப்பைப் போல
நம்பிக்கையின் விதைப்பாக மரங்களை நாட்டுவோம்

**தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்**

(CS 40853) (3.6)

**இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம் 28.11.1933

மறைவு 24.10.2019

**அமரர் செல்லையா சிவஞானசுந்தரம்**
(ஓய்வு பெற்ற உப அதிபர் யா/ வண்ணை நாவலர் மகாவித்தியாலயம்)

அப்பா நீங்கள் இறைவனடி சேர்ந்து இரண்டு ஆண்டு காலமாகி விட்டது. நேற்றுப் போல இருக்குது நெஞ்சமெல்லாம் உங்கள் நினைவு காற்றோடு கலந்த உங்கள் நினைவுகளை நினைத்து வெந்துபோகும்.


009 476 695 524

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(CS 17884) (3.6)


# இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

## "சுத்தமான நீர், சுகமான வாழ்வு"




மாபெரும் விலைக் கழிவு
**Rs.29,000/=**
~~Rs.35,000/=~~
TDS <2000PPM

* இலவச நீர் பரிசோதனையுடனும்,
* மிகக் குறைந்த விலையிலும்,
* அதிகபட்ச உத்தரவாதத்துடனும்,
* எங்கும் பெறக்கூடிய உதிரிப்பாக வசதிகளோடும்,
* வாழ்நாள் முழுவதும் பராமரிப்பு சேவைகளுடனும்
* 24 மணித்தியாலத்தினுள் முறைப்பாட்டு திருத்திக்கொடுத்தல்



Yarl Smart Water Solution

**YARL SMART** *Water solution (Pvt) Ltd.*
341, KKS Road, Jaffna / Karadippoku Junchtion, Jaffna Road, Kilinochchi.
**021 430 0044, 076 666 5267**
yarlsmartwater@gmail.com / www.yarlsmartwater.com

# 542 தொற்றாளர்கள் நேற்று அடையாளம்

கொழும்பு, நவ.1

இலங்கையில் மேலும் 542 கொரோனாத் தொற்றாளர்கள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 41 ஆயிரத்து 73 அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் மேலும் 317 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர். இதுவரை 5 இலட்சத்து 12 ஆயிரத்து 798 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர். (எ-22)

# நிருபமாவுக்கு அழைப்பு

சர்ச்சைக்குரிய "பண்டோரா பேப்பர்ஸ்" தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக முன்னாள் அமைச்சர் நிருபமா ராஜபக்சவுக்கு இலஞ்ச ஊழல் ஆணைக்குழு கடந்த திங்கட்கிழமை அழைப்பு விடுத்திருந்தது.

எனினும், மருத்துவக் காரணங்களுக்காக தன்னால் குறித்த தினத்தில் ஆணைக்குழுவில் முன்னிலையாக முடியாது என்றும், வேறு ஒரு தினத்தை வழங்குமாறும் அவர் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் கேட்டுக்கொண்டுள்ளார். (எ-இ)

## ஆளும் அரச...

அரசின் இந்த உடன்படிக்கைக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கும் விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, வாசுதேவ நாயணக்கார போன்றோர் இந்த உடன்படிக்கையை இரத்துச்செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர்.

நாட்டின் சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதை அனுமதிக்க முடியாது என்ற கோஷத்துடன், இவர்கள் அரசைப் பகிரங்கமாக விமர்சிக்க ஆரம்பித்துள்ளதுடன், ஊடகச் சந்திப்புக்களையும் நடத்தியுள்ளமை ஆளும் ஸ்ரீலங்கா பெரமுன கட்சியினரிடையே கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

உதய கம்மன்பில மற்றும் விமல் வீரவன்ச ஆகியோர் அமைச்சுப் பதவிகளில் இருந்துகொண்டு அரசை வெளிப்படையாக விமர்சிப்பதால், அவர்களை அமைச்சுப் பதவிகளில் இருந்து நீக்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினர் ஜனாதிபதி, பிரதமருக்கு அழுத்தங்களை கொடுக்க ஆரம்பித்துள்ளனர் என்று உட்கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது அமைச்சுப் பதவிகளை வைத்திருக்கும் மூவரிடம் இருந்து பதவிகளை மீளப் பெறுவது தொடர்பாகவும் ஆராயப்படுகின்றது என்றும், வெளிநாட்டுக்கு பயணித்துள்ள ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நாடு திரும்பியதும் இது தொடர்பாக இறுதி முடிவெடுக்கப்படும் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. அதேநேரம், அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகள் சில, அரசுக் கூட்டணியில் இருந்து விலகிக் கொள்வது தொடர்பாக ஆராய ஆரம்பித்துள்ளன. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொதுவெளியில் பங்காளிக் கட்சிகள் தொடர்பாகக் கடும் தொனியில் கருத்துக்கள் வெளியிடுவதால், பங்காளிக் கட்சிகள் கடும் அதிருப்தியில் உள்ளன என்று தெரிகின்றது.

அதேநேரம், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அமைத்துள்ள 'ஒரு நாடு ஒரு சட்டம்' ஜனாதிபதி செயலணியால், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர் என்றும் தெரியவருகின்றது. ஜனாதிபதியின் இந்த நடவடிக்கை, முஸ்லிம் சமூகத்தை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்று முஸ்லிம் தலைவர்களிடையே ஏற்பட்டுள்ள சந்தேகமே இதற்குக் காரணம். இந்த முரண்பாடுகளால் கொதிநிலை அடைந்துள்ள கொழும்பு அரசியலில், எதிர்வரும் நாள்களில் எதிர்பாராத மாற்றங்கள் ஏற்படக்கூடும் என்று அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர். (எ-இ)

## ராஜபக்ச...

உள்ளது. மக்களுக்குத் துரோகமிழைத்த இந்த அரசு, ஆட்சி கவிழும் நாட்களை எண்ணிக்கொண்டிருக்கின்றது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசு ஏற்கனவே மக்களின் ஆணையைக் காட்டிக்கொடுத்து விட்டது. அரசு செல்லும் இந்த அழிவான பயணத்தை ஐக்கிய மக்கள் சக்தியால் மாத்திரமே பின்நோக்கித் திருப்ப முடியும்.

அரசால் அநீதி இழைக்கப்பட்ட விவசாயிகள், இன்று எம்மிடம் நீதி கேட்கின்றனர். விரைவில் அமையவுள்ள எமது புதிய ஆட்சியில் விவசாயிகளுக்கு நீதியை வழங்கியே தீருவோம். சேர் ஜோன் கொத்தலாவல அன்று நாட்டின் விவசாயிகளின் முன்னேற்றத்துக்காகப் பெரும் பங்களிப்பைச் செய்தார். ஹரியால உள்ளிட்ட பிரதேசங்களில் விவசாயக் குடியேற்றங்களை ஏற்படுத்த அவர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார் - என்றார். (எ-22)

## பொருத்தமில்லை..

பொதுஜன முன்னணி என்ற வகையில் எம்மால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

இவ்வாறு துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் என்ற வகையில் எமக்கு கூட்டுப் பொறுப்பு உள்ளது. கட்சிக் கூட்டத்தில் ஒன்றைக் கூறிவிட்டு, வெளியில் சென்று இன்னுமொன்றைக் கூறும்போது ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி என்ற வகையில் எம்மால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

நாங்களே பிரதான தாய்க் கட்சி என்பதே இதற்குக் காரணம். எமது கட்சி அடிபணிய விரும்பாது. நாய்தான் வாலை ஆட்ட வேண்டும், வால் நாயை ஆட்டாது என்பதை நாங்கள் தெளிவாகக் கூறுகின்றோம்.

சத்தங்களைக் கண்டு நாங்கள் அஞ்ச மாட்டோம். எமக்கு இரும்புச் சத்தமும் பழக்கமானது. வாள்களின் சத்தமும் பழக்கமானது.

பொருத்தமில்லை என்றால் விவாகரத்துச் செய்ய வேண்டும் - என்றார். (எ-22)

## ஆலோசனை...

ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களுடனான சந்திப்பொன்றின்போது, ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற கொள்கை வரைவை உருவாக்குவதற்காக ஜனாதிபதி செயலணி ஒன்றை அமைத்ததுடன், அதற்குத் தலைவராக கலகொட அத்தே ஞானசார தேரரை நியமித்திருந்தார். இதற்குப் பல மட்டங்களில் இருந்தும் எதிர்ப்புக் கிளம்பியிருந்தது.

இது தொடர்பாக கட்சித் தலைவர்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவித்துள்ள ஜனாதிபதி, ஞானசாரருக்கு பதவி வழங்கப்பட்டமை தனக்கு ஆலோசனை வழங்கவே தவிர, நாட்டுக்கு நீதியை வழங்குவதற்காக அல்ல என்று கூறியுள்ளார்.

தான் செய்யும், சொல்லும் அனைத்துக்கும் கட்சித் தலைவர்களிடம் ஆலோசனை பெற வேண்டுமானால், தனக்குத் தேவையான நண்பர்களைத் தெரிவு செய்யவும் அவர்களிடம் அனுமதி பெற வேண்டிய நிலை ஏற்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-இ)

## அதிக..

நடவடிக்கை எடுக்கப்படும் என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

நாளை (இன்று) முதல் அனைத்து மாகாணங்களுக்கு இடையிலான பஸ் மற்றும் ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவித்த இராஜாங்க அமைச்சர், இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 6 ஆயிரம் பஸ்கள் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன என்றும் தெரிவித்தார்.

152 அலுவலக ரயில்கள் நாளை (இன்று) முதல் சேவையில் சேர்க்கப்படவுள்ளன என்று தெரிவித்த திலும் அமுனுகம, நீண்ட தூர ரயில் சேவைகள் எதிர்வரும் 5ஆம் திகதி முதலே ஆரம்பமாகும் என்றும் தெரிவித்தார்.

காலை மற்றும் மாலை அலுவலக ரயில் சேவையில் சமூக இடைவெளியைப் பேணுவது சாத்தியமற்றது என்பதால், ரயில் சேவையைப் பயன்படுத்துவோர் தங்களது சுகாதாரப் பாதுகாப்புத் தொடர்பாக அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ-இ)

## கொரோனாக்..

தாளை, தம்புத்தேகமை மற்றும் பதவியா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே கொரோனாத் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர்.

இவர்களில் உடல் நலம் பாதிப்பு ஏற்பட்டவர்கள் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், ஏனையோர் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

தொற்றாளர்களுடன் தொடர்புபட்ட சுமார் 100 பேர் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் மருத்துவர் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (எ-இ)

## அமைச்சின்..

அறிவித்துள்ளார் என்று அறிய முடிகின்றது.

இந்தப் பதவிக்குப் பொருத்தமான ஒரு நபரை நியமிக்க வேண்டும் என்று கல்வி அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார் என்றும், ஒருவரின் பெயரை அமைச்சர் பரிந்துரைத்துள்ளார் என்றும் தெரியவருகின்றது.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலகத்துக்கு அறிவிக்கப்படுவதுடன், ஜனாதிபதியுடனும் கலந்தோலோசிக்கப்படும் என்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச கல்வி அமைச்சருக்கு பதிலளித்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

தற்போது கல்வி அமைச்சின் செயலாளராக பேராசிரியர் கே.கபிலா சி.கே. பெரேரா பணியாற்றுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-இ)

## கச்சாயில்...

பவரே உயிரிழந்துள்ளார்.

அதேவேளை, மோட்டார் சைக்கிளில் பயணித்த 25 வயதுடைய இளைஞர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

முதியவரின் உடல் சாவகச்சேரி மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்துத் தொடர்பான விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (எ-159)

## தரம் 5...

மாணவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு அண்மையில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. மாணவர்கள் பாடசாலைக்குச் செல்ல ஆரம்பித்துள்ள நிலையில், மகாகச்சக்கொடிப் பகுதியில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றின் மாணவனுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மாணவனின் வகுப்பறையைச் சேர்ந்த ஏனைய மாணவர்களுக்கும், தொடர்புகளைப் பேணிய மாணவர்களுக்கும் இன்று பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (எ-110)

## சுகாதாரத்...

வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களின் போதனா மருத்துவமனைகள், மாவட்ட மருத்துவமனைகள், ஆதார மருத்துவமனைகளில் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்றும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதன் முதற் கட்டமாக, மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், துணை மருத்துவ சேவையாளர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் சுகாதாரத் துறையில் பணியாற்றுபவர்களுக்கு மூன்றாவது டோஸ் ஏற்றப்படவுள்ளது.

அடுத்த கட்டங்களில் பொதுமக்களுக்கான மூன்றாவது டோஸ் ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (எ-இ)

## இரவுநேரம்...

பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மீசாலை, வடக்கு பூதவராயர் கோயிலடியில் நடந்துள்ளது. அங்குள்ள வீடொன்றில் தனித்து வாழும் பெண் ஒருவர், இரவு பாதுகாப்புக் கருதி உறவினர் வீட்டில் தங்கும் நிலையில், காலையில் வீட்டுக்கு வந்தபோது, நகைள் திருடப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப்படுகின்றது.

திருடர்கள் வீட்டில் இருந்த பாதுகாப்புக் கமராவின் வன்தட்டையும் கழற்றிச் சென்றுள்ளனர்.


இந்தத் திருட்டுத் தொடர்பாகக் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ-159)


# ‘அழிவைத் தேர்ந்தெடுக்க வேண்டாம்’

# ஐ.நா.சபைக்குள் புகுந்த டைனோசர்!

## உலகத் தலைவர்களுக்குப் புத்திமதி

**வொஷிங்டன், நவ. 1 ‘அழிவைத் தேர்ந்தெடுக்காதீர்கள்’ என்று ஐ.நா. சபையில் கேட்கிறது இந்த டைனோசர். அதன் குரலைத் தலைவர்கள் செவி மடுப்பார்களா?**





கேள்வி கேட்கிறது ‘பிராங்கி’ என்ற பெயர் கொண்ட அந்த டைனோசர்.

ஏற்கனவே அழியுண்டுபோன உயிரினமாகிய டைனோசர் ஒன்று இராஜதந்திர விதிமுறைகளைமீறி உலகத் தலைவர்களுக்கு உரையாற்றுகின்ற காணொலி ஒன்று வெளியாகி உள்ளது. கிளாஸ்கோ நகரில் பருவநிலை மாற்றம் தொடர்பான மிகப்பெரிய உலக மாநாடு தொடங்கும் வேளையில் இந்த வீடியோ ‘கிளிப்’ வெளியிடப்பட்டுள்ளது.

ஐ.நா. பொதுச் சபையிலும் உலகெங்கும் உள்ள ஐ.நா. அலுவலகங்களிலும் கடந்த ஓரிரு நாள்களாகக் காட்சிப்படுத்தப்பட்டு வருகின்ற இந்த வீடியோவை ஐ.நா. அபிவிருத்தித் திட்ட அமைப்பு தயாரித்துள்ளது. ஜுராசிக் வேல்ட் திரைப்படத் தொழில்நுட்பக் கலைஞர்களின் உதவியுடன் கணினி முப்பரிமாணக் காட்சிப் படங்களாக உருவாக்கப்பட்ட அந்த டைனோசர் நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. பொதுச் சபை மண்டபத்துக்குள் பிரதிநிதிகளை ஆச்சரியப்படுத்தும் விதமாகத் திடுதிப்பென உள்ளே நுழைகிறது. முதலில் பாதுகாவலர் ஒருவருடன் நகைச்சுவையாக உரையாடிவிட்டு சபையின் முன்பாக வந்து ஒலிவாங்கியைப் பிடித்து உரையாற்றத் தொடங்கு கிறது. டைனோசரின் உரைக்கு உல கப் பிரபலங்கள் சிலர் பல மொழிகளில் பின்னணிக் குரல் வழங்கி உள்ளனர்.

பிரபல நடிகரும் பாடகருமாகிய ஜக்ப்ளக் ஆங்கில மொழியில் குரல் வழங்கியுள்ளார். “எங்களிடம் ஒரேயொரு சிறு பூமிக்கோள் தான் இருக்கிறது. தவறுகளுக்கு இனியும்என்ன காரணத்தைச் சொல்லப்போகிறீர்கள்? காரணங்களையும் மன்னிப்புகளையும் சொல்வதை நிறுத்திவிட்டு மாற்றங்களைத் தொடங்க வேண்டிய தருணம் இது.

பணத்தின் மூலம் நீங்கள் செய்கின்றஎல்லாக் காரியங்களையும் ஒரு தடவை யோசித்துப் பாருங்கள். உலகம் முழுவதும் மக்கள் வறுமையில் வாடுகிறார்கள். முழு இனத்தையும் அழிப்பதற்குப் பணத்தைச் செலவிடுவதை விட அவர்களைக்காப்பாற்றுவது மிகவும் அர்த்தமுள்ளதாக இருக்கும் என்று நீங்கள் நினைக்கவில்லையா?’’ இவ்வாறு தலைவர்ளைப் பார்த்துக்

பருவநிலை மாற்றம் தொடர்பான ஐ.நா. உச்சி மாநாடு நேற்று ஞாயிற்றுக்கிழமை ஸ்கொட்லாந்தில் கிளாஸ்கோ நகரில் தொடங்கியுள்ளது. புவி வெப்பமடைவதைக் கட்டுப்படுத்த தத்தமது பங்குக்கு எடுக்கவுள்ள காபன் குறைப்புத் திட்ட முன்மொழிவுகளுடன் சுமார் 200 நாடுகளது தலைவர்களும் பிரதிநிதிகளும் கிளாஸ்கோ நகரில் கூடியுள்ளனர். (ம)


### பணிப்பெண் தேவை

சாவகச்சேரியில் வயோதிபப் பெண்ணை தங்கி நின்று பராமரிப்பதற்கு ஒரு பெண் உதவியாளர் தேவை.

076 302 5566 / 077 473 9889

(CS 40849)(3.6)

### சந்நிதி முருகன் ரான்ஸ் போட்

வடமாகாணத்தில் உள்ள எந்த மாவட்டத்திலும் பழைய காட்போட் மட்டைகள் மற்றும் அச்சக கழிவுப் பேப்பர்கள், கொப்பி, புத்தகங்கள் மற்றும் அச்சக அலுமினிய பிளேட்டுகள் அனைத்தும் சிறந்த விலைக்கு தங்களது இடத்திற்கே வந்து கொள்வனவு செய்யப்படும்.

உரிமையாளர் தொடர்பிற்கு : ர.திலீபன்

077 112 0982 / 077 022 6449

(CS 40843) (3.6)

### வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

சகல நாடுகளுக்கும் மிக குறைந்த கட்டணத்தில் பொதிகள் அனுப்பிட

UK 950/=

திருமுருகன் கொம் நெற்

321 K.K.S.Road, Jaffna. 077 755 4528

(CS 17998) (3.6)

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மானிப்பாய் சமுர்த்தி வங்கி வீதியில் 6 1/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. நிலப்பரப்பு, 1 3/4, 1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்டநிலையில் 14 அடி பாதையுடன் மருதடி விநாயகர் கோவிலில் இருந்து 700M தூரம்.

**பார்வையிடும் நேரம்**


காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை.

- தரகர் தேவையில்லை.
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

077 814 7389
077 614 7333

(CS 40854) 1/6


## மரண அறிவித்தல்



### அந்தோனிப்பிள்ளை ஜெயசீலன் (சீலன்)

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் இல. 12, குருசோ வீதி, சுண்டுக்குளி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை ஜெயசீலன் (சீலன்) கடந்த (29.10.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை - அருளம்மா ஆகியோரின் புதல்வனும், காலஞ்சென்ற திருச்செல்வம் மற்றும் இராணிமலர் ஆகியோரின் மருமகனும், திருமதி ஜக்குலின் ஜெயசீலன் (லலி - ஆசிரியர்- கொழும்புத்துறை சென் ஜோசப்ஸ் வித்தியாலயம்) அவர்களின் உயிரான கணவரும், ஜெனற் டிஜான்சியா, ஜெனற் டிவின்சியா (யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை - மாணவி) ஆகியோரின் ஆருயிர்த் தந்தையும், றோஸ்மலர் (கனடா), இராசேந்திரம், அற்புதராணி, அன்ரன் இராசகாரியர் (டோகா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோகராஜா (கனடா), அல்போன்சா, காலஞ்சென்ற ஜேக்கப் ராஜ்குமார், ரவி, பபி, டயஸ் (நியூநெல்சன் லேணர்ஸ் - உரிமையாளர்), யசோ, லெனின் (வாசு - பிரான்ஸ்), பிரியா (பிரான்ஸ்), திலீப் (பிரான்ஸ்), அனிஸ்ரன்(பேராதனை தேசிய கல்வியற்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், சுகந்தி சாள்ஸ் (கனடா), நிதன் சுவிற்றா (கனடா), ரவி அனுசியா (கனடா), நாதன் அருந்ததி (கனடா), ரூபன் அனுரிக்கா (கனடா), தினேஸ் ஆகியோரின் தம்பிமாமாவும், தர்சிகா, றொமி, லக்கு, அனோஜ், அபிஷேக், அகிசயன், பிரவின் ஆகியோரின் சித்தப்பாவும், தனுஸ்ரன், விதுஷனா, நிதுஷன், கரன்சியா, திசாந் ஆகியோரின் மாமாவும், ராஜேஸ்வரி, பவானி, தூரிகா, றொபின்சன் ஆகியோரின் சகலனும், காலஞ் சென்றவர்களான மரியநாயகம், அரியமுத்து சலோமை மற்றும் மங்களம் ஆகியோரின் பெறாமகனும், ஸ்ரனிஸ்லாஸ், சூசைப்பிள்ளை காலஞ்சென்ற கிறிஸ்ரீனம்மா மற்றும் ரகு யசிந்தா ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (01.11.2021) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் ஏற்றுக்கொள்ளவும்

**இல.12, குருசோ வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல் : குடும்பத்தினர்**
**ரவி - 077 615 3599**
**டயஸ் - 077 358 1916**
**தினேஸ் - 077 869 1492**

(cs.40850) (2.6)



...பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.